# ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 5. அத்தியாயம் 4.

### சாந்திநிகேதன அனுபவம்.

ராஜ்கோட்டையிலிருந்து நான் சாந்திநிகேதனம் சென்றேன். அங்கிருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் என்னை மிக்க அபிமானத்துடன் வரவேற்றார்கள், அந்த வரவேற்பானது மிக்க எளிய முறையிலும் ஆனால் மிகுந்த அன்போடு கூடியதுமாக இருந்தது. நான் இங்கேதான் முதன் முதலாக காகாசாஹிப் கெலல்காரைச் சந்தித்தேன். அவரை காகாசாஹிப் என்று ஏன் அழைத்து வந்தார்களென்று எனக்கு அப்போது தெரியாது. பிறகு நான் தெரிந்துகொண்டேன். அதாவது, என் அத்தியந்த நண்பரும், என்னுடன் சில காலம் இங்கிலாந்திலிருந்தவருமான ஸ்ரீ. கேசவராவ் தேசபாண்டே பரோடாவில் கங்காநாத வித்தியாலயமொன்றை நடத்திவந்தார். அப்போது அவர் தம் வித்யாலயத்திலுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையில் நெருங்கிய பந்துத்வ பாசம் ஏற்படும் பொருட்டு எல்லா ஆசிரியர்களுக்கும் பந்துத்வ முறையில் அழைத்து வந்தார். ஸ்ரீ. கெலல்காரும் அப்போது அவ்வித்யாலயத்தில் ஒரு ஆசிரியராக இருந்தபடியால் அவரை சிறியதந்தை அல்லது பெரியதந்தை என்று பொருள் படக்கூடிய வகையில் "காகா" என்று பெயரிட்டழைத்தார். ஸ்ரீ. பாத்கி மாமா என்றும், ஸ்ரீ. ஹரிஹர சர்மா அண்ணா என்றும் அழைக்கப்பட்டார்கள். இவ்வாறே மற்றவர்களும் இத்தகைய பெயர்களைப் பெற்றிருந்தனர். சுவாமி ஆனந்தரும், ஸ்ரீ. பட்டவர்த்தனும் பிறகு அந்த வித்யாலயத்தில் சேர்ந்து கொண்டார்கள். இவர்களனைவரும் பிறகு என் துணைவர்களாக வந்துவிட்டார்கள். தேசபாண்டேயும் "சாஹப்" என்னும் பெயரால் அழைக்கப்பட்டார். வித்யாலயம் நின்றுவிட வேண்டிய காலம் வந்தபோதும் அவர்கள் தங்கள் பெயர்களையும் அதற்கேற்ற அன்பையும் மட்டும் மாற்றிக் கொள்ளவில்லை.

காகா சாஹிப் பலவித அனுபவங்களையும் பெறும் பொருட்டு பல ஸ்தானங்களுக்குச்சென்று அனுபவப்பட்டு வந்தார். நான் சாந்திநிகேதனம் போனபோது அவரும் அங்கு இருக்க வேண்டியதாயிற்று. அதே இனத்தைச் சேர்ந்த ஸ்ரீ. சிந்தாமணி சாஸ்திரியும் அங்கே இருந்தார். அவர்களிருவரும் சமஸ்கிருதம் போதித்து வந்தனர்.

சாந்தி நிகேதனத்தில் தங்கியிருந்த போனிக்ஸ் குடும்பத்தாருக்கென தனியான இடம் ஒதுக்கியிருந்தனர். மேற்படி குடும்பத்துக்கு மகன்லால் காந்தி தலைவராக இருந்து ஆசிரமத்தின் கொள்கைகள் சிறிதும் பிறழாதவாறு அதை நடத்தி வந்ததுடன் இடைவிடாமுயற்சியையும், பிடிவாதத்தையும் கண்டு சாந்தி நிகேதனத்திலிருந்த வரனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். ஸ்ரீமான்கள் ஆண்ட்ரூஸும், பியர்ஸனும் அங்கே இருந்தார்கள். வங்காளி ஆசிரியர்களில், ஜகதானந்தபாவு, நீபால் பாபு, சந்தோஷ பாவு, க்ஷிதி மோகன பாபு, நாகின்பாவு, சிரத்பாபு, காலிபாபு ஆகியவர்களுடன் நெருங்கிய நட்பைப் பெற்றோம்.

### தன்கையே தனக்குதவி.

நான் ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் விரைவில் கலந்து கொண்டு தன்கையே தனக்குதவி என்பதுபற்றி விவாதிக்க ஆரம்பித்தேன். அப்போது நான் அவர்கள் சம்பளம் கொடுத்து வைத்திருக்கும் சமையல்காரனை நீக்கி விட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து சமையல் செய்தால் தேகாப்பியாசம், மனோதிடம் முதலியவைகளைப் பழகுவதுடன் தன்கையே தனக்குதவி என்பதற்குத் தக்க நிதரிசனமாக இருக்குமென்றும் கூறினேன். ஒருவரோ அல்லது இருவரோ தான் முடியாதென்று தலையை அசைத்தனர். மற்றவர்கள் இந்த யோசனையை ஒப்புக் கொண்டனர். பலர் இந்தப் புதிய முறையையும் அனுஷ்டித்துப் பார்க்க வேண்டுமென்று அதை விரும்பினார்கள். ஆகவே அதை அனுபவத்தில் செய்து பார்ப்பதென்று முடிவு செய்தோம். இவ்விஷயத்தில் கவி ரவீந்திரரின் அபிப்பிராயம் என்ன என்று நான் கேட்டபோது அவர் மற்ற ஆசிரியர்கள் சம்மதப்பட்டால் தமக்கும் சம்மதமே என்று கூறினார். மாணவர்களிடம் மட்டும் அவர், "இவ்வனுபவந்தான் சுயராஜ்யத்துக்குரிய வழியாக இருக்கிறது" என்று கூறினார்.

பியர்ஸனும் இந்த அனுபவமுறையில் மிக்க ஊக்கத்துடன் வேலை செய்து வந்தார். சிலர் காய்கறி அரிவதற்கென்றும், வேறு சிலர் பதார்த்தங்களைக் கழுவுவதற்கென்றும் பிரிக்கப்பட்டனர். நாகின் பாபு முதலிய சிலர் சமையலறை சுத்தமாக இருக்கின்றதா என்பதைப் பரீக்ஷித்து வந்தார்கள். அவர்களெல்லாம் காண்டிகளைக் கையிலேந்தி வேலை செய்வதைப் பார்க்க எனக்கு மிக்க சந்தோஷமாக இருந்தது.

இந்த தேகாப்பியாச வேலையில் 125 மாணவர்களும் தங்கள் ஆசிரியர்களுடன் கலந்து கொண்டார்களென்றால் இது ஆச்சரியமல்லவா? அவர்கள் தங்கள் வேலைகளைப்பற்றி விவாதமும் செய்து வந்தனர். சிலர் சலிப்புற்றனர். ஆனால் பியர்ஸன் சிறிதும் சலிப்புறவில்லை. அவர் எப்போதும் சிரித்த முகத்துடன் சமையல் அறையில் ஏதேனும் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அவர் பெரிய பெரிய பாத்திரங்களையெல்லாம் தேய்க்கும் வேலையை ஏற்றுக்கொண்டார். பொதுவாகவே எல்லா மாணவர்களும் இதில் ஊக்கம் காட்டி உற்சாகத்துடன் வேலை செய்து வந்தார்கள்.

இப்படிப்பட்ட மாறுதல்கள் ஒரு முறை ஆரம்பிக்கப்பட்டு விடுமாயின் அவை நாளடைவில் அபிவிருத்தியடையுமென்பதில் ஆக்ஷேபமில்லை. போனிக்ஸ் கூட்டத்தாரின் சமையலும் தங்களாலேயே ஆக்கிக் கொள்ளப்பட்டதுடன் எளிய முறையில் தயாரிக்கப்பட்டதாகவும் இருந்தது. நீராவியின் உதவியால் சமையல் செய்யப்படும் அடுப்பில் ஒரே முறையில் சாதம், பருப்பு, காய் கறிகள் முதலியன தயாரிக்கப்படும். வங்காளிகளின் சமையல் முறையிலும் ஒரு புதிய தோற்றத்தை உண்டாக்குவதற்காக சாந்திநிகேதன மாணவர்கள் எங்கள் முறையைப் பின்பற்ற ஆரம்பித்தனர்.

ஆனால் சில காலத்துக்குப் பிறகு இவ்வனுபவம் கைவிடப்பட்டது. இந்த அனுபவத்தைச் சிறிது காலம் அந்த பெயர்பெற்ற சாந்திநிகேதனத்தில் அனுஷ்டித்ததால் ஒன்றும் குறைந்துவிடவில்லை என்பதும், அதனால் ஆசிரியர்களுக்கு நன்மை ஏற்பட்டதென்பதும் தான் என் அபிப்பிராயம்.

### கோகலேயின் மரணம்.

நான் அங்கே சில காலம் தங்கியிருக்க விரும்பினேன். ஆனால் இறைவன் விருப்பம் வேறு விதமாக இருந்தது. நான் அங்கு ஒரு வாரம் தங்கியிருந்ததற்குள் புனாவிலிருந்து கோகலே இறந்துவிட்டதாகத் தந்தி கிடைத்தது. இச்செய்தியைக் கேட்டு சாந்திநிகேதனம் முழுதும் அப்படியே துக்கசாகரத்தில் மூழ்கிவிட்டது. எல்லாரும் என்னிடம் வந்து எனக்கு ஆறுதல் கூறினார்கள். ஆசிரமத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடி தேசத்துக்காகத் துக்கித்தார்கள். இது பரிசுத்தமான கூட்டமாகும். அன்றையதினம் நானும் என் மனைவியுடனும் மகன்லாலுடனும் புனாவுக்குப் புறப்பட்டேன். மற்றவர்கள் சாந்திநிகேதனத்தில் தங்கியிருந்தார்கள்.

ஆண்ட்ரூஸ் பர்த்துவான் வரை எங்களுடன் வந்தார். அப்போது வழியில் அவர், "இந்தியாவிலும் சத்தியாக்கிரகம் செய்யக்கூடிய காலமொன்று வருமெனத் தாங்கள் நினைக்கிறீர்களா? அப்படிப்பட்ட காலம் வருமாயின் அது எப்போது நேரும்?" என்று என்னைக் கேட்டார். அதற்கு நான், "இதற்கு விடையளிப்பது அரிது: ஏனெனின், நான் ஒரு வருஷம் வரை இந்தியா பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து இங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்ளவேண்டுமென்றும், அதற்கு முன் பொது விஷயத்தைப்பற்றி ஒன்றும் ஆத்திரப்பட்டுக்கூறி விடக் கூடாதென்றும் கோகலே என்னிடம் கூறியிருக்கிறார். மேலும் அந்த ஒரு வருஷம் கழிந்த பின்னரும் நான் ஆத்திரப்பட்டு எதையும் கூறிவிடமாட்டேன். ஆதலின் இன்னும் ஐந்தாறு வருஷங்களுக்குள் சத்தியாக்கிரகம் ஏற்படுமென்று கூற இடமில்லை" என்று விடை பகர்ந்தேன்.

எனது 'இந்திய சுயராஜ்யம்' என்னும் நூலிலுள்ள சில கொள்கைகளைக் கண்டு கோகலே சிரித்து, நான் ஒரு வருஷம் இந்தியாவில் தங்கிய பின்னர் என் அபிப்பிராயங்கள் தானாகவே மாறிவிடுமென்று கூறியதையும் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

---

# வைதிகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

## 11-வது அத்தியாயம்.

### காசிவிஸ்வேசரின் காட்சியைக்கண்டார்.

அன்பே சிவம். அன்பு வேறு சிவன் வேறென்று சொல்லுகிறவர்களறிவிலாதவர்களாம். காசிவிஸ்வநாதர் அன்பு வடிவாய் அமர்ந்திருந்தார். அங்கு சமத்துவ மணங்கமழ்ந்தது. சகோதரத்துவம் தாண்டவமாடியது. உயர்வு தாழ்வு என்பது மருந்துக்குமில்லை. புன்னகை தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தது. வைதீகர் கண்டார் காக்ஷியை. கொண்டார் மகிழ்ச்சியை. நாதனை அன்பாலாலிங்கனம் செய்தார். தேடித் தேடிப் பார்த்தும் இம்மியளவும் வித்தியாசமென்பதையேகாணோம். யாத்திரையின் பலனாக நல்மூர்த்தியைத் தெரிசித்தார். இறைவனை நோக்கி, பக்திமேலீட்டா லன்பொழுக ஆனந்தக் கண்ணீர்ப் பிரவாகம் பெருக 'பித்தா பிறை சூடி பெருமானே' யெனும் திருவாசகப் பாட்டை மெய்மறந்து பாடினார்; ஆடினார்; உண்மை தேடினார்; துவேஷத்தை மூடினார். நாளிதுவரை உயர்ந்தவனென மமதையால் செய்த பாபங்களையெல்லாம் மன்னிக்க வேண்டும்; என்னைப்போலுள்ளவர்களுக்கும் தேவரீர் அறிவுச்சுடர்கொளுத்தவேண்டும்; உன்னருளாலுன் தாள்பெற வேண்டுமென வணங்கினார்.

பின் வெளிவந்து உணவருந்திவிட்டுக் காசியை விட்டுப் புறப்பட்டார். 'பழையன கழிதலும், புதியனபுகுதலும் வழுவன காலவழக்கினாலே' எனு முண்மையை அறிந்தார்.

நாட்டுவளப்பமறியாததால் வைதீகர் இத்தனை கேடுகளுக்கும் ஆளானார். இப்படிப்பட்ட வைதீகம் பிராமணர் எனச் சொல்லிக்கொள்வோரிடம் அதிகமாயிருந்தாலும், அநேகமாய் சகல சாதியார்களிடமுமிருக்கிறது.

நமது வைதீகருக்கு கையிலோ காசு இல்லை; கடன் கொடுப்பார் யாருமில்லை. 'பொருளில்லார்க்கிவ் வுலகமில்லை; பசி செய்வதோ பெருந்தொல்லை; சோற்றுக்கோ வழியில்லை; என் செய்வதென ஏங்கிச்சென்றார்.

தன் ஊரை நோக்கி வந்தவழியே பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது ஒரூரில் ஒரு பிரசங்கம் நடந்தது. அநேகமாயது முடிவடையும் நேரமாயிருந்தது. அங்கு சென்று வைதீகர் அமர்ந்தார். பின் வரும் விஷயங்களவர் காதில் விழுந்தன:— "அன்பர்களே! முடிவாக நான் கூறும் விஷயமென்ன வென்றால், பிறப்பினால் உயர்வு தாழ்வு கிடையாது. விவேகமுள்ள எவரும் தீண்டாமையை ஒப்புக் கொள்ளமாட்டார். இந்து மதத்திலுள்ள எல்லோர்க்கும் ஒருவர்க்கிருக்கும் சுதந்திரமொருவர்க்குண்டு. இந்துமத சம்மந்தமான உண்மை நூல்களைப் படிக்கச் சகலர்க்கும். சமஉரிமையுண்டு. ஒழுக்கமுள்ளவரே உயர்குலத்தவர். அறிவுள்ளவரே பெரியவர். ஒரு சாரரால் சுய நலங் கருதி வயிற்றுப் பிழைப்புக்கென ஏற்படுத்தப்பட்ட திதி முதலிய சடங்குகளைப் பஹிஷ்கரிக்க வேண்டும். மனுதர்ம சாஸ்திரம் போன்ற வயிற்றுப் பிழைப்பு நூல்களைப் படித்து அவற்றின்படி வாழ்க்கையை நடத்தல் வடிகட்டின தப்பிதம். வைதீகம் நம்மதத்திலுள்ள கழிவு குப்பை. விவேகம் அதை வெறுப்பது நிச்சயம். சிறப்பாக பிராமணர்களும் பொதுவாகப் பிராமணரல்லாத மற்ற உயர் ஜாதியாரெனச் சொல்லிக் கொள்பவர்களும் வைதீகப் பேயும் துவேஷப்பேயும் பிடித்தாடுகிறார்கள். மானிடனெனப் பிரபஞ்சத்தில் தோன்றியிருக்கும் ஒவ்வொருவரும் சுய மரியாதையாகிய உயிரினும் பெரிய மானத்தைக் காப்பாற்ற வேண்டும். கடவுளுக்கும் நமக்கும் மத்தியில் தரகர்கள் தேவையேயில்லை. பக்தியே இன்றியமையாதது. செல்வத்தினாலொருவன் கடவுளருள் பெற்றிடலாமென்பது முடியாத ஒன்று. பக்தியையும் தூய்மையையும் எவரும் பொருளினால் பெறமுடியாது. இவைகளெல்லாம் பிராமணர்களுடைய பொய்யான வயிற்றுப் பிழைப்புக்கடைகளில் விற்கப்படுவதில்லை. உள்ளன்பே உதவி செய்து உலகரக்ஷகனிடம் உறவு செய்துவைக்கும். திருக்கோவில்களிலுள்ள விக்கிரஹங்களுக்கு பூஜை செய்யத் தூய்மையும் அன்புமுள்ள ஒவ்வொருவருக்கும் பாத்தியதையுண்டு. ஆபாசங்கள் நிறைந்த ஆலயங்களுக்குச் செல்வதைக் காட்டிலும் செல்லாதிருப்பது லாபம். நம் மதத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நம் ஆலயங்களுக்குப் போகப் பூர்ண உரிமையுண்டு. கோவில்களுக்குள் போகச் சிலர்க்கு உரிமையில்லையென்று கூற எவர்க்கும் உரிமை கிஞ்சித்துங்கிடையாது.

அதிக உரிமைகளை மேல் சாதியாரெனச் சொல்லிக்கொள்ளும் சுயநலக் கிருமிகள் விட்ட அன்றே நம் நாட்டிற்கும் மதத்திற்கும் நற்கால மணியடிக்கும். இன்றேல் நம்மதத்தைக் கெடுத்த தோஷமவர்கள் தலையிலேயே விழும். ஆங்கிலேயர்களாகிய ஆட்சி செய்வோர்களிடம் உரிமைகேட்டும் மேல் சாதியார்களெனச் சொல்லிக்கொள்வோர்கள் மற்றவர்களுக்கு ஏன் சம உரிமை கொடுக்கக்கூடாது? தீண்டாமையெனும் உருவற்ற தத்துவம் தாண்டவமாடுவதைப் பாருங்கள். மனிதரை மனிதர் தொடக்கூடாது என்பது என்ன நியாயம்? இது மட்டுமா? இன்னும் எத்தனையோ கொடுமைகளிருக்கின்றன! பார்க்கக்கூடாது; நெருங்கக்கூடாது; உட்காரக்கூடாது; குடை பிடிக்கக்கூடாது; செருப்பணியக்கூடாது; தெருக்களில் நடக்கக் கூடாது எனப் பலபல கொடுமைகள் கூடி நிற்கின்றன. என்ன அநியாயம்! எத்துணை அறிவீனம்!! பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வு கொள்ளும் வித்தியாசத்தை ஆண்டவன் காட்டியுளனோ? இல்லையே. பின்னேன் இக்கொடுமைகள் தலைவிரித்தாடுகின்றன? எல்லாம் இடைக்காலத்தில் ஒரு சில சுயநலப் பதர்களால் தம் ஆற்றலுக்குத் தகுந்தாற்போல புகுத்தப்பட்டுவிட்டன. பாமர ஜனங்கள் என் செய்வர்? பாவம்! அநியாயக்காரர்களின் அக்கிரமங்களுக்குள்ளாகி வந்திருக்கிறார்கள். இவ்வநியாயக்காரர்கள் தாம் வேதவழியேகுவதாகப் பெருமை கொள்ளுகிறார்கள். வேதம் வேதம் என்று வாதம் பண்ணுகிறார்கள். வேதம் பிரமாவாலெழுதப்பட்டதெனக் கள்ளத்தனம் பண்ணுகிறார்கள். தம் நலங்கோரிச் செய்த சண்டாளத்தை இறைபால் சுமத்தப் பார்க்கிறார்கள். தேவப்பேரால் பாவம் செய்யுமிவர்க்கு எக்கதி கிடைக்குமோ? பாவமொரு புறம் இருக்கட்டும். இன்னவரால் நாட்டுக்குக் கேடுமென்றோ விளைந்திருக்கிறது? இவ்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஆங்கிலம் வேண்டுமா, தமிழ் வேண்டுமா?

"ஆங்கிலம் வேண்டுமா, தமிழ் வேண்டுமா?" என்றதோர் வினா இக்காலத்தில் எங்கணும் ஓர் முக்கிய பிரச்சினையாகவிருந்து வருவதைக் காண்கின்றோம். ஆங்கிலேயர் ஆட்சியின் பயனால் நம் தாய்ப் பாஷையாம் தமிழ் பாஷையை மறந்து அதை இருந்தவிடந் தெரியாமல் மறைந்தேகும் நிலைமைக்கு மாற்றிவிட்டோம். இவையாவையும் உணர்ந்த பாஷாபிமானிகளான தமிழ் மக்கள் பலர் கிளம்பி தமிழ் மொழியைத் திரும்பவும் மேல்நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்னும் நன்னோக்கத்துடன் உழைத்து வருகின்றார்கள். எல்லாப் பத்திரிகைகளும் தமிழ் மாதாவைக் கை தூக்க வென்று போதிய ஊக்கங் காட்டத் தலைப்பட்டுவிட்டன. தமிழ் சர்வகலாசாலை ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணமும் தென்னாட்டில் ஆங்காங்கு வேரூன்றியிருக்கிறது. தவிரவும், காலேஜ் வகுப்புகளிலுங் கூட தமிழைக் கட்டாயப் பாடமாக மாற்றிவிட்டதும் தமிழபிமானிகளின் சிறந்த முயற்சியாலே யாகுமென்பதும் யாவரும் அறிந்த விஷயம். இவை அனைத்தும் ஆராய்ந்து பார்க்கத் தமிழ் நாட்டில் பாஷாபிமானம் ததும்பி நிற்கிறதென்பது புலனாகிறது.

நாடார் பெருமக்களும் தங்களது தாய்ப் பாஷையான தமிழின் அபிவிருத்திக்காக மிகவும் வருந்தி உழைக்கிறார்கள். தமிழ் மக்களென்ற ஹோதாவிலும், தங்கள் முன்னோர்களான பாண்டிய மன்னர்கள் தமிழ் வளர்ச்சிக்காகப் பேருக்கங் காட்டியுள்ளா ரெனும் தோரணையிலும் இந்த அவசியமான காலத்தில் தாய்ப் பாஷைக்காகவே உழைக்க வேண்டுமென்பது நாடார்களின் கொள்கையாகும்.

தமிழுக்காக உழைப்பது நமது கடமையென்பதைத் தமிழ் மகன் ஒருவனும் மறுக்கான். ஆனால் ஆங்கிலத்தையும் ஆதரிப்பது நமது நாடார் சமூகத்தைப் பொறுத்த மட்டிலும் மிகவும் அவசியமாகவே யிருக்கிறது. தமிழைக்கற்றுக் கொள்வதில் நாம் எவ்வளவு சிரமமெடுத்துக் கொள்ளுகிறோமோ அதைவிடக் கூடுதல் சிரமம் ஆங்கிலங் கற்பதில் எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழை வளர்ப்பது கடமையைக் காப்பாற்றவென்றால் ஆங்கிலங் கற்றுக் கொள்வது அவசியத்துக்கே யாகும் என்பதைத்தான் கண்டு வெளியிடுகின்றேன். இந்தியாவுக்கு சுதந்திரம் எப்படி அவசியத்திலே நிற்கிறதோ அப்படியே நாடார் சமூகத்துக்கு ஆங்கிலக் கல்வி அவசியத்திலேயே நிற்கிறது. இந்தியர்களுக்கு சுதந்திரக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு முக்கிய காரணம் ஆங்கிலத்தின் உதவி என்பதை ஆங்கிலங் கற்ற யாவரும் அறிவர். இந்தியாவிலுள்ள பல்வேறு ஜாதிகளில் சிலர் ஆங்கிலக் கல்வியில் முன்னேறியும் பலர் பின்னடைந்தும் நிற்கின்றார்கள். நாடார் சமூகம் ஆங்கிலக் கல்வியில் பின்னணியிற்றான் நின்றுகொண்டிருக்கிறது. மேனாட்டு நிலையும், இந்தியாவுக்குள் நிலவும் தேசிய ராஜீய ஜாதிய சூட்சி முறைகளும் ஆங்கிலங் கற்றவர்களுக்கு ஏனையோர்களைக் காட்டிலும் எளிதில் புலப்படும். இங்கிலாந்து எந்தத் தந்திரப் பிரயோகத்தால் இந்தியாவைத் தனக்குக் கீழ் வைத்துக்கொண்டிருக்கிறதோ, அதே தந்திரப் பிரயோகத்தைத் தான் இந்தியாவிலுள்ள சில ஜாதித் தலைவர்கள் மற்றைய ஜாதியர்களைத் தலையெடுக்க வொட்டாமல் அடக்கி ஒடுக்கி வைத்துக்கொள்வதற்குத் தங்கள் துணைக்கருவியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலமாவது மேனாட்டு ராஜீய தேசிய அறிவாவது சற்றுமில்லாத பாமர ஜனங்கள் பலர் இம்மாதிரியான சூட்சி முறைகளை அறிந்தொழுகும் ஆற்றல் சற்றுமில்லாது நாளடைவில் குன்றிப்போகின்றார்கள். ஆங்கிலக் கல்வியின் உதவியால் அது கல்லாத பன்னூறாயிரம் ஜனங்களை அடக்கி யாண்டு விடலாமென்ற நோக்கத்துடன் இக்காலத்து பலர் வெளியேறிவிட்டார்கள். ஆகையால் ஆங்கிலத்தைக் கற்று நமக்கவசியமான அறிவினத்தையும் கொண்டு காலமறிந்து நடக்காமற் போனால் சமீப எதிர் காலத்தில் இதற்காக நாம் வருந்த வேண்டியதாய் முடியுமன்றோ?

தேசத்தொண்டு புரிவோர்களை இக்கட்டுரை மனஞ் சலிக்கச் செய்யுமென்று யாரும் நினைக்கவிடமில்லை. தேசாபிமானத்துக்கும் இத் தத்துவத்துக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இந்தியாவின் சுதந்திரத்துக்காக இந்தியர்கள் போராட வேண்டாமென்று கூறவில்லை. தேசத்துக்குழைக்கிறவர்களென்று சொல்லப்படுகிறவர்களில் பெரும்பாலோரும் சூட்சிக்காரர்களாகவே யிருப்பதால் அவர்கள் சூட்சி வலையினின்றும் தப்பித்துக் கொள்வதற்காவது ஆங்கிலக் கல்வி இன்றியமையாத சாதனமாகவே யிருக்கிறது.

நாடார் சமூகத்துக்கு ஆங்கிலக் கல்வி அவசியமாகவே யிருக்கிறது என்பதைக் குறித்துச் சற்றுக் கவனிப்பாம். தொழிற் போட்டியில் இந்தியா பின்னணியிற்றான் நிற்கிறது. நாடார் மரபினர்களும் இந்தியர்களானமையால், தொழிலை விருத்திசெய்ய மிகவும் கடமைப் பட்டவர்களாவர். மேனாட்டுத் தொழில் முறைகளைக் கற்றுக் கொள்வதற்கு ஆங்கில பாஷை போதிய உதவிகள் புரிந்துவருகிறது.

நாடார் சமூகம் வியாபார விஷயத்தில் முன்னேற்ற மடைந்திருந்த போதிலும் அத்துறையில் இன்னும் மென்மேலும் முன்னேறவேண்டும். வியாபாரத்தில் உயர் நிலையடைய வேண்டுமாயின் நாம் இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய மேனாடுகளோடு நெருங்கிப் பழக வேண்டும். இதற்கும் ஆங்கிலபாஷை அவசியமாகவே யிருக்கிறது.

இராஜ தந்திர முறைகளில் இந்தியா மேனாட்டு முறைகளையே பின்பற்றி வருகிறது—பின்பற்றிக்கொண்டு மிருக்கும். இராஜ தந்திரங்களையும் தேச நிலை முதலியவைகளையும் அறியும் ஆற்றல் வாயாமற்போனால் எதிர்காலத்தில் நாடார் சமூகத்தின் கதி என்னவாக முடியுமென்பது சொல்லாமலே விளங்கும். அரசாங்கத்தினின்றும் நமக்குச் செல்லவேண்டும் உரிமைகளைப் பிறர் கவரமுடியாமல் நாமே நம்மை யாண்டு புகழ் பெற்றிலங்க வேண்டுமாயின், உலக இராஜ தந்திரங்களை விளக்கிக் காட்டும் ஆங்கிலக் கல்வியைத்தான் அத்தியாவசியமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

மேற்கூறிய யாவும் தமிழின் உதவியாலும் கற்றுக் கொள்ளலாமென்று வாதஞ்செய்யவும் ஒரு சாரார் வெளிவரக்கூடும். சுமார் நூறு வருடகாலஞ் சென்றால்—அதாவது 21-ம் நூற்றாண்டில்—அவர்கள் கூற்று உண்மையாக முடியும். ஆனால் இந்த 20-ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு அவசியமான யாவும் ஆங்கில பாஷையின் உதவியாற்றான் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாட்டுக்கு வேண்டுவனவெல்லாம் தேச பாஷைகளிலேயே எழுதப் பெற வேண்டுமென்னும் நல்லுணர்ச்சி நாட்டில் இப்பொழுதுதான் நிலவத் தலைப் பட்டிருக்கிறது. இது முற்றிலும் ஊர்ஜிதத்திற்கு வர இன்னும் ஒரு நூற்றாண்டு காலம் வேண்டும். அக்காலத்தில் ஆங்கிலத்தின் அவசியம் நமக்கு அதிகம் ஏற்படாது. அந்தக் காலம் வருமளவும் நாடார் சமூகம் ஆங்கிலத்தையும் ஆதரித்தொழுகத்தான் வேண்டும்.

சி. தங்கையா நாடார்,
நாடார் மகாஜன சங்கம்
கௌன்ஸில் மெம்பர்,
தென் திருவிதாங்கூர்.

---

**காலதேச வர்த்தமானத்தை யோர்ந்து நடப்பவர்களே சாலச் சிறந்தவராவர்.**

---

## நாடார் மகாஜனங்கள் கவனிக்கவேண்டும்.

### ஆலயப்பிரவேசம் அவசியமே.

21-5-28-ல் வெளியீடான மித்திரனில் "ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமி நாடாரவர்கள் கவனிக்கவேண்டும்" எனும் தலைப்பின்கீழ் கழுகுமலை, ஸ்ரீமான் ஆ. ராமசாமி நாடாரவர்கள் நமக்கு ஆலயப்பிரவேசம் வேண்டுவதில்லையென்பதாக எழுதியுள்ளார். அவர் கூறு மாப்போல் ஆலயப் பிரவேசம் தேவையில்லையென்பது ஒப்பத் தகுந்ததில்லை யாகையால் இச் சிறுவுரையை ஈண்டு வழுத்த நேர்ந்தது. பல் வளஞ்சேர் பாண்டிநாட்டின் தலைநகராமாம் மதுரையம்பதியில் அறநெறி முறை வழுவாது செங்கோல் நடாத்தி வந்த நம் குல மன்னவர்களாகிய பாண்டிய வரசர்கள் இன்றைக்கு சுமார் 600 வருடங்களுக்கு முன் வடுக அரசர்களால் இராஜ்ய பரிபாலனம் இழக்கப்பட்டார்களெனினும் அவ்வடுக மன்னர்கள் நமது உரிமைக்குப் பங்கம் வராமல் ஆறு பட்டங்கள் வரை பாதுகாத்து வந்தனர். பின் 7-வது பட்டத்தவராகிய திருமலை நாய்க்கர் ஆட்சி வந்ததும், திருநெல்வேலியிலாண்ட பஞ்சவழுதி அரசர்கள் ஐவர்களையும் கபடமார்க்கமாய்த் தோற்கடித்து அரசகுல நாடார்களுக்கு ஒவ்வோர் ஆலயத்திலும் இருந்த மேல வாசல் பாத்தியத்தையும் பிடுங்கிக்கொண்டார். ஆலயங்களில் மேல வாசலை அடைத்துக் கீழ வாசல் வழிதான் நாடார்கள் செல்லவேண்டுமென்னக் கட்டளையும் பிறப்பித்தார். "மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்" என்ற நெறி நின்று நாடார்கள் தமக்குள்ள மேல வாசல் பாத்தியமிழந்த பின்னர் கீழ வாசல் வழிபோதல் கௌரவக் குறையென்று ஆலயங்களுக்கே போகாது நின்றுவிட்டார்கள். இது நாளடைவில் நாடார்கள் கோவிலுக்குள் நுழையக் கூடாதவர் என்னும் பொருள்பட நின்று விட்டது. இக்கௌரவக் குறையை நிவர்த்திக்கவும் நாட்டில் சுதந்திரம் நிலவவுமே மகாத்மா காந்தி சொற்படி சத்தியாக்கிரகமுறை கையாளவேண்டியிருக்கிறது. இம்முறையில் வைக்கத்தில் ஈழவர்கள் ஜெயம் பெறவில்லையா? கல்பாத்தியில் ஜெயம் பெறவில்லையா? தென் ஆபிரிக்காவில் வெள்ளையரை ஜெயம் பெறவில்லையா? சத்தியாக்கிரகம் நடந்துகொண்டு இருக்கும் இக்கோரத்தில் நாம் ஏன் மௌட்டிகத்தனமாக இருக்கவேண்டும். சத்தியாக்கிரகம் செய்யாதபடி மற்ற ஒருவரும் நமக்கு விட்டுக்கொடுக்கப் போவதில்லை. நாம் கோரும் கௌரவமும் அடையப் போவதில்லை. ஆகையால் சகோதரர்களே! ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமி நாடார் அவர்கள் விருப்பத்தின்படி இந்த நல்ல சமயத்தில் தொண்டர் படையைச் சேர்த்துக் கூடிய சீக்கிரத்தில் இதைசங்கத்தின்மேற்பட்ட காரியமாக வைத்து ஆலயப்பிரவேசத்திற்குச் சத்தியாக்கிரகம் செய்யத் தயாராக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. அய்ய நாடார்,
திருநெல்வேலி.

---

## வாலிப நாடார் 3-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

நாடார் 12-வது கான்பரன்ஸ் உபசாலைக்கமிட்டி சேர்மன் ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பரநாடாரவர்களும், பொக்கிஷதார் ஸ்ரீமான் க. வள்ளிநாடாரவர்களும் தென்னைக்குச்சென்றுடையார் திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை ஷெ மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று பேட்டி கண்டு கேட்டுக் கொண்டதில், அன்னவர் 5-7-28-ல் (ஆனி மீ 22உ) தலைமை வகிக்க மனமுவந்து விட்டதாகக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

## தொண்டின் பெருமையும், தொண்டு பூண்டொழுகலும்.

பூவுலகின் கண்ணே கிடைத்தற்கரிய மானிட ஜன்மத்தைப் பெற்ற நமக்குத் தொண்டு பூண்டொழுகல் ஒரு முக்கிய கடமையாகுமென்பது, "வினையறிந்தாற்றிவிடுதலையுடையு வேண்டியதே" என்றும் "சேரியபணியாற்றி நூற்றாண்டு வாழ்" என்றும் இன்னும் இன்னவைய நீதிகளை நூல்கள் ஓதுவதினின்றும், யுக்தி அனுபவத்தானும் இனிது விளங்குகின்றது.

அஃது கைமாறு கருதிச் செய்தல், கைமாறு கருதாமல் செய்தல் என இருவகைப்படும். அவற்றுள் "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும், வானகமும் மாற்றலரிது" என்பதிற்கிலக்காக கைமாறு கருதாமல் செய்யும் தொண்டே மேன்மையுற்றதென விளங்குகிறது.

"மார்கண்டனுக்காக மறலிபட்ட பாட்டையுன்னிப் பார்க்கில் அன்பர்க்கு என்ன பயங்காண் பராபரமே" என்னும் தாயுமான சுவாமிகளின் பொன்னுரையில் உண்மைத் தொண்டர் ஒருவருக்கும் பயப்படவேண்டியதில்லையெனவும், பரமாத்மாவானவர் தொண்டருக்கு வயப்பட்டு அடியார்க்கு அடியனாகவும், தொண்டர்க்குத்தொண்டனாகவும் எப்பொழுதும் தொண்டூழியம் செய்கிறான் என்பதும் தெள்ளிதில் விளங்குகின்றது.

தொண்டின் பெருமையை அறிந்த அப்பர் சுவாமிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனப்பகன்று, ஜனங்கள் தொண்டு செய்யுமாறு போதித்திருக்கிறார். "பெரிது பெரிது புவனம் பெரிது.........தொண்டரின் பெருமையைச் சொல்லவும் படுமோ" என வழுத்தும் பொன்னுரையில் உலகமே தொண்டாலும், தொண்டராலும் நடைபெறுகிறதென்றால், தொண்டின் பெருமை தானென்னே!

தொண்டராக வேண்டுமெனில் "பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு" என்பது போன்று நாம் பரோபகாரத்திலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமேயல்லாது, பிரதி உபகாரத்தையாவது, புகழையாவது விரும்பக் கூடாது. மற்றும், "ஏனென்று கேட்பது நம் காரியமன்று, நம் கட்டை உத்தரவுப்படி நடந்து அவசியமாயின் உயிர் விடுதல்வேண்டும்" என மொழிந்த சுவாமி விவேகானந்தரின் திருவாக்கை மனதில் புகுத்த வேண்டும்.

பின்னர் "சமூக ஊழியத்திற்கு வாழ்நாளைச் செலவிட வேண்டுமாயின் பின்னைப்பேற்றில் அவாவையும், பொருளாசையும் அறவே ஒழித்து குடும்பக் கவலையினின்றும் நீங்கி வானப் பிரஸ்த வாழ்வை மேற்கொள்ள வேண்டுமென" காந்தியடிகள் போதிக்கும் போதனையைச் சிரமேற்கொண்டு பிரமச்சரியத்தை அனுசரிக்க வேண்டியது முக்கிய கடனாகின்றது. இதனால் இல்லற வாழ்க்கையிலீடு கொண்டோர் தொண்டு செய்ய வேண்டியதன்று என்று கொள்ளற்க. வாணாள் முற்றிலும் தொண்டுக்கென அர்ப்பணம் பண்ணுகிறவர்களுக்கு அம்முறை சிலாக்கியமென்பதேயாம். யாரும் தம் தம் ஆற்றலுக்குத் தகுந்தாற்போல் தொண்டு செய்தல் போதுமானது.

அன்பர்களே! பணிவும், செய்யுங் காரியங்களில் நம்பிக்கையும் உள்ள தொண்டர்களே நமக்கு ஊன்று கோலன்றி, பணமும் குடியும், குலமும் ஊன்று கோலாகாதென்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

இறுதியாக, வாழ்வு, தாழ்வு, பசி, சாவு முதலியவைகளுக்குப் பயப்படாமல் இறைவன் மேல் பாரத்தைப் போட்டு களங்கமற்றவர்களாய் தொண்டில் இறங்கவேண்டும். அப்பொழுது ஈசன் அருள் புரிவார்.

ப. வே. ச. பழனிச்சாமி,
விருதுநகர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாற்றா வெளியை மனதவிழ
நிலையிலன்றித் துரிய வாழ்வைத்
தீதில் பரமப் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்
விபவ ௵ வைகாசி மீ ௰ உ

---

## சிறப்பாளர்.

நமது நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாட்டின் சிறப்பாளராக சேலம் ஜில்லா குமாரமங்கலம் ஜமீன்தாரும் நமது சென்னை மாகாண முதல் மந்திரியுமான கனம். டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் வரச் சம்மதித்திருக்கிறார்கள் என அறிந்து மிகவும் சந்தோஷிக்கின்றோம்.

நாடார் மகாநாட்டுக்கு இதுவரையும் ஜட்ஜிகள், சட்ட மெம்பர்கள், பிஷப், ஜமீன்தார், இந்தியாச் சட்டசபை அங்கத்தினர், மகாண உதவி மந்திரி முதலிய பெரியார்கள் தலைமை வகித்து வந்திருக்கின்றார்கள். ஆனால் முதல் மந்திரி ஒருவராவது விஜயம் செய்யவில்லை. இம்முறை கூடும் மகாநாட்டுக்கு ஒரு மகாண முதல் மந்திரி விஜயம் செய்வது சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது. தற்கால நிலைமையில் நாடார் மகாநாட்டுக்கு மந்திரி விஜயம் செய்வது அத்யாவசியமென்று நாடார்களிற் பெரும்பாலோர் கருதுகின்றார்கள். பெரும் பாலோருடைய அபிப்பிராயத்திற்கேற்ப மகாநாட்டின் உபசாரணைக்கமிட்டியார் கனம் மந்திரியை அழைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. மகாநாடு கூடும் தினம் இன்னும் ஒரு மாசந்தானிருக்கிறது. உபசாரணைக் கமிட்டியார் நாளிதுவரை 21-வயில் மகாநாடு கூடுவதற்குரிய இடத்தில் "பாண்டிய விலாஸ்" என்ற நாமத்துடன் ஒரு சிங்காரக்கொட்டகை அமைக்க வேலை ஆரம்பித்திருக்கிறார்கள். பிரதிநிதிகள் தங்குவதற்கு வேண்டிய சவுகரியங்களும் சாப்பாட்டு வசதிகளும் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். நாலாபக்கங்களுக்கும் டிக்கெட் விற்பனைக்கு ஆட்களை அனுப்பப் போகிறார்கள். சுமார் 3000 ஜனங்களுக்கு மேல் விஜயம் செய்வார்கள் என்று தெரியவருகிறது. நாட்கள் மிகச் சுருக்கமாயிருப்பதால் வெகு தூரமுள்ள கிராமங்களுக்கு டிக்கெட்டு விற்பனை செய்கிறவர்கள் போக முடியுமென்பது கஷ்டந்தான். அதற்காகவே நமது பத்திரிகை மூலமாக வால் நோட்டீஸ்களும், அழைப்புக் கடிதங்களும் உபசாரணைக் கமிட்டியார் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தெரியாத சில கிராமங்களிலுள்ளவர்களுக்கும் தெரிந்தவர்கள் கான்பரன்ஸ் பற்றி ஞாபகப்படுத்தி அவர்களை அழைத்து வருவார்களாக.

இம்மகாநாட்டுக்கு நாடார்குலத் தலைவர்களெல்லாம் அவசியம் விஜயம் செய்ய வேண்டிய காரணங்களைப்பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். நமது சமூகங்களிலுள்ள ஒற்றுமைக் குறைகளை நிவர்த்திப்பதற்கு ஏற்பட்ட சில கமிட்டிகள் மீண்டும் அவ்வேலையை ஆரம்பித்து சமூகக் குறைகளை நிவர்த்தித்து உருப்படச் செய்ய வேண்டியதும், கிராமாந்திரங்களில் தீவிரமாய்க் கல்வியைப் பரவச் செய்ய வேண்டியதும் அவசியமாயிருப்பதால் தலைவர்களெல்லாம் தவறாமல் விஜயம் செய்ய மீண்டும் வேண்டுகிறோம்.

---

## சுயராஜ்யத்திற்குப் பின் சுயமரியாதையாம்.

நிலம், நீர், நெருப்பு, ஆவி, ஆகாயம் ஆகிய ஐந்து உறுப்புக்களால் ஆக்கப்பெற்ற இயற்கையுலகத்தில் சரம் அசரம் என்று பல்லாண்டுகள் தோறும் ஆவதும் அழிவதும் ஆண்டவன் திருவிளையாடல் அன்றி யாதுண்டு? மக்களும் மாக்களும் வசிக்கத்தக்க மாதிரியில் ஆண்டவனால் ஆக்கப்பெற்ற இவ்வுலகம் யாருக்குச் சொந்தம்? வல்லான் வகுத்ததோ—புலவன் கட்டிய வுலகமோ—சுத்தவீரன் பூமியோ! அங்ஙனமாயின் அவர்களெல்லாமெங்கே? மண்ணோடு மண்ணாய் மறைந்தனரன்றோ? "முடி சார்ந்த மன்னரு மற்றுரும் முடிவிலொரு பிடி சாம்பலாவர்" என்பதைப் பொய்யிலா மறைகள் புகலுவதுமன்றி மெய்யில் ஐரோப்பா யுத்தம், பூர்வ சக்கிரவர்த்திகளின் முடிகள் சிதறச் செய்து நிரூபித்ததன்றோ? தோட்டியும் தொண்டமானும் நாட்டுக்கு வேண்டியவர்கள் தான்; கருடனோடு சரிக் குருவியும் உயரப் பறக்க உரிமையுண்டு என்று ஐரோப்பா யுத்தம் அறிவுறுத்திய பிறகும் திமிர்கொண்ட வல்லரசுகள் கர்வம் தணியாதிருப்பதேன்? அவர்கள் பேராசையன்றோ? நமது நாட்டிலும் பிறப்பில் உயர்வு தாழ்வு உண்டென்ற பேதமை நீங்காததேன்? பிறப்பில் உயர்வு தாழ்வு என்ற பிணக்குத்தான் நமது நாட்டை அடிமைப்படுத்தி வந்திருக்கிறது—வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாலும், நிலமும், நீரும், நெருப்பும், ஆவியும், ஆகாயமும் ஆண்டவனுங்கூட எங்களுக்கே சொந்தமென்று சொல்லும் ஒரு சாரார் பிடிவாதம் விடாமல் நிலத்தில் நடக்க, நீரைக்குடிக்க, நெருப்பாவி ஆகாயத்தைத் தெரிசிக்க வேறு யாருக்கும் உரிமைகிடையாதென்று மறுக்கின்றார்கள். இவ்விழி முறையான கட்டுப்பாடு உடைத்தெறியப்பட்டு சுயமரியாதையுண்டானால் தான் சுயராஜ்யமுண்டு என்று சொல்கின்றார்கள் சுயமரியாதை வீரர்கள். சுயராஜ்யம் வந்தால் சுயமரியாதையுண்டாகுமென்று சொல்கின்றார்கள் சுயராஜ்யத் தேசிய வீரர்கள். சுயராஜ்யமாயிருக்கும் கோளதேசத்தில் மனிதருக்கு மனிதர் செய்யும் கொடுமைகளைத் தேசிய வீரர்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையா? சுயமரியாதை மலையாளத்தில் மருந்துக்காகிலும் கிடைப்பதரிதென்பதைத் தேசியவீரர்கள் அறியமாட்டார்களா? ஒரு சில வகுப்பார்கள் மிருகங்களினும் கேவலமாய் மதிக்கப்பட்டு வருவது தெரியாதா? கேவலம் கழுதையும், நாயும், பன்றியும் தாராளமாகப் போய் வரக்கூடிய தெருவில் மனிதரை நடக்க விடாமற் செய்து வருவதும சுயராஜ்யமுள்ள மலையாள மல்லவா? தெருவில் நடப்பதற்கு லக்ஷக் கணக்கான பணச் செலவும் சத்தியாக்கிரகமும் செய்யும்படி நேர்ந்தது சுயராஜ்யம் பெற்ற வைக்கத்திலல்லவா? உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி அவர்களையும் அவருக்கு அடுத்த படியிலுள்ள பாஞ்சால தேச முடி சூடா மன்னர் லாலா லஜபதிராய் அவர்களையும் கோயிலில் சுவாமி தெரிசனம் செய்ய விடாமற் றடுத்துக் கொடுமை செய்தது சுயராஜ்யத்திலுள்ள கன்னியா குமரியும், திருவனந்தபுரமுமல்லவா?

இவ்வாறு பல சுதேச சமஸ்தானங்களில் நடக்கும் கொடுமைகள் சொல்ல முடியாது. சுமார் நாற்பது வருடங்களாக சுயராஜ்ய முயற்சியும், வெள்ளைக்காரனை விலக்க வேண்டிய சூட்சியும் நடந்துதான் வந்திருக்கின்றன. இதனால் ஏழை மக்கள் கஷ்டம் தீர்ந்ததா? பணக்காரனும் படித்தவனும் வெள்ளைக்காரனோடு சேர்ந்து கொண்டு உத்தியோகத்திலும் வர்த்தகத்திலும் தொழிலிலும் கொள்ளை லாபம் சம்பாதிப்பது வாவா வளர்ந்து வந்திருக்கிறதேயன்றி வேறு பிரயோசனமுண்டா? எதற்காக சுயராஜ்யம் வேண்டும்? ஏழை மக்களை யீடேற்றவல்லவா? அப்படியாயின் என் சுயராஜ்யம் பெற்ற ஸ்தல ஸ்தாபனங்களில் ஏழை மக்களுக்குப் பல இன்னல்களிருப்பதாக அளவற்ற முறையீடுகள் வருகின்றன? தாழ்ந்த வகுப்பினருக்கு இந்தியச் சட்டசபையில் உதவி வேண்டிய லாலாஜீ தீர்மானத்தை ஆதரிக்கத் தேசிய வீரர்களுக்கு மனமின்றி சட்டசபைக்குச் செல்லாதிருந்தனரே.

கொள்ளைக்காரன் உள்ளே நுழைந்து குரல்வளையைப் பிடித்து நெரித்துக் கொண்டிருக்கும் போதும் தம் மருமைச் சகோதரனுக்குரிய பாகத்தைக் கொடுக்க மன மிசையாத பாமலோபி, கொள்ளைக்காரன் தோல்வியுற்றுப் போன பிறகு கொடுப்பானென்பது என்ன நிச்சயம்? சிறந்த தேசபக்தர்களெல்லாம் சேர்ந்து முயற்சி செய்தும், மகாத்மா காந்தி சிபார்சு செய்தும் தெருவில் நடக்க விடாமற் செய்து வரும் துரோகிகளை எப்படி நம்ப முடியும்? மகாத்மாவையும் லாலாஜீயையும் அவமானப் படுத்திய முட்டாள்களின் மனம் சற்றேனும் கனியுமா? இந்திய நாட்டிற்கு இரு நேத்திரங்களாயுள்ள மகாத்மா, லாலாஜீ இவர்களை அவமானப்படுத்தியதற்காக இதுவரையும் தேசிய வீரர்கள் என்ன செய்தார்கள்? சுதேச சமஸ்தான அரசர்களுக்கு ஏதேனும் சொன்னார்களா? தேசியம் என்று வெறும் வாயால் சொல்லுவதில் ஒரு பிரயோசனமுமில்லை.

ஆகவே சுயமரியாதை யின்றி சுயராஜ்யமில்லை யென்பதைத் தேசிய வீரர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அல்லது சுயராஜ்யத்திற்குப் பின் சுயமரியாதை உண்டு என்பதை ஜனங்கள் நம்பச் செய்ய வேண்டும். அந்த நம்பிக்கைக்கு நமது நாட்டில் இடமில்லை யென்றுதான் சொல்வோம். ஆகையால் எல்லோரும் சமவுரிமையோடிருக்கும் சுய மரியாதைச் செல்வனை ஆதரிப்போமாக.

---

## குறிப்புகள்.

### வேண்டுகிறோம்.

நமது 12-வது மகாநாடு குறித்த வால் (சுவர்) நோட்டீஸ்களை நம் மித்திரன் அனுபந்தமாக வைத்து இவ்வெளியீட்டில் நம் நேயர்களொவ்வொருவருக்கும் அனுப்பியிருக்கிறோம். கிடைக்கப்பெற்று நம் மகாநாடு பற்றிய ஆர்வ மேலீடு கொண்டு மகாநாட்டுக்குக் குறிப்பிட்ட தேதியில் விஜயம் செய்ய வேண்டுகிறோம். தாம் விஜயஞ் செய்தலோடு ஆங்காங்குள்ள மற்றைய நம்மவர் பலரையும் அழைத்து வருமாறும் வேண்டுகிறோம். டிக்கெட் விற்பனைக்கு ஆட்கள் சுறுக்கில் வெளிக்கிளம்ப விருக்கின்றார்கள். விற்பனைக்கு வருகிறவர்களுக்கு ஒவ்வொருவரும் தக்க உதவி புரிந்து விற்பனையைச் சண்ணியப்படுத்தி ஒவ்வோரிடத்தினின்றும், போதிய பிரதிநிதிகள் வருவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுகிறோம். இதற்குள் ஆங்காங்கு நம் மகாநாடு குறித்து கிளர்ச்சி செய்யப்பட்டு நம்மவர்கள் மன மீர்த்திராநிற்பர் எனவே நம்புகிறோம். எனினும் இன்னும் விசேஷ கிளர்ச்சி செய்து மகாநாடு வெகு சிறப்பாய் நடைபெறச் செய்ய வேண்டுகிறோம். இது வரையில் நடைபெற்ற மகாநாட்டைக் காட்டிலும் இம் முறை நடைபெறப் போவது சிலாகிக்கத் தக்கது என்பது யாமறிவோம். எனவே நம் மகாஜனங்கள் அனைவரும் விஜயஞ் செய்து நமக்கான சாதனங்களைக் கையாளும் வழிகளைக் கவனித்து முடிவு செய்ய வேண்டுகிறோம்.

### நன்றி செலுத்துகிறோம்.

திருவாளர். திருமேனிநாத நாடார்களின் அகால மரணங்குறித்து எண்டிசையினின்றும் பல கனவான்கள் மிகவருந்தி அனுப்பிய அனுதாபக் கடிதங்களும், இரங்கற்பாக்களும் அவ்வப்போது நம் மித்திரனில் பிரசுரித்து வந்திருக்கின்றோம். இன்னும் சில கனவான்களிடமிருந்து வந்திருக்கும் அனுதாபங்களும், இரங்கற்பாக்களும் பிரசுரிக்கப்படாமலிருக்கின்றன. திருவாளர். திருமேனிநாத நாடவர்களின் பெருமையை நோக்கில், அன்னவர் மரணத்திற்கு இன்னும் நீடித்த காலமட்டும் அனுதாபங்கள் வந்து குவியுமென்பது துணிபாகிறது. அவற்றை யெல்லாம் பிரசுரித்துக் கொண்டிருப்பதற்கு நம் மித்திரனுக்குச் சொற்பப் பக்கங்களே யெனும் காரணமும், காலங் கடந்த சங்கதியே யென்ற காரணமும் அனுமதிக்கவில்லை. எனவே இதுகாறும் பிரசுரிக்கப்பட்ட அனுதாபங்கள், இரங்கற்பாக்களோடு நிறுத்திக் கொண்டோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அனுதாபங்காட்டிய அனைத்து கனவான்களுக்கும் எமது நன்றியைச் செலுத்துகிறோம்.

---

### திலகர் மகன் தற்கொலை.

காலஞ் சென்ற லோகமானிய திலகரின் இரண்டாம் குமாரர் ஸ்ரீதார்பால்வண்ட் திலகர் பூனாவுக்கு அருகில் பாம்பர்டா ஸ்டேஷனுக்கும், கிர்க்கி ஸ்டேஷனுக்கும் மத்தியிலுள்ள ரயில்வே லயனில் ட்ரெயினுக்கு முன் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்குக் காரணம் தெரியவில்லை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் 12-வது மகாநாடு.

### உபசரணைக்கமிட்டியின் அறிக்கை.

நமது 12-வது மகாநாடு நிகழும் விபவஹு ஆனிமீ 21, 22, 23 (1928-ஹு ஜூலை மீ 4, 5, 6) தேதிகளில் நடை பெறுவதற்கு முடிவாகியிருக்கிறது. மகாநாட்டைத் திறந்து வைப்பதற்குக் குமாரமங்கலம் ஜமீன்தாரும், சென்னை கவர்ன்மெண்ட் முதன் மந்திரியுமாகிய கனம். டாக்டர் பி. சுப்பராயன் எம். ஏ., பி. ஸி. எல்., எல். எல். டி. அவர்கள் சம்மதந்தந்துவிட்டார்கள். மகாநாட்டுக்கு நமது மகாஜன சங்கம் சிரந்தர அக்கிராஸனர் பொறையார், ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள்.

அழைப்புப்பத்திரங்களும், வால் (சுவர்) நோட்டீஸ்களும் அச்சாகி, பல பாகங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. டிக்கெட்டுகளெல்லாம் அச்சாகிவிட்டன. டிக்கெட் விற்பனைக்கு ஏற்ற நபர்கள் தெரிந்தெடுக்கப் பெற்று வருகிறார்கள். நிகழும் வைகாசிமீ 21-ந் தேதியில் டிக்கெட் விற்பனைக்கு ஆட்கள் வெளிக்கிளம்ப ஏற்பாடாகியிருக்கிறது. மகாநாடு கூடும் கொட்டகை, போஜனக் கொட்டகை வேலைகளும், மற்றும் போர்டு எழுத்து வேலைகளும், ஜாகை முதலிய வசதிகளுக்குரிய வேலைகளும் துரிதமாய் நடைபெற்று வருகின்றனர். இவண் நம் மகாஜனங்களிடையே மகாநாடு குறித்து விசேஷ பரபரப்பேற் பட்டிருக்கிறது.

டிக்கெட் விற்பனையில் ஆங்காங்குள்ள நமது மகாஜனங்களின் பேருக்கம் பெரிதும் வேண்டற்படுகிறது. டிக்கெட்டுகள் ஏராளமாய் விற்பனையாகி ஏராளமான பிரதிநிதிகள் விஜயஞ் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மகாநாடு வெகு சிறப்பாய் நடைபெற வெளியூர்ப் பிரமுகர்கள் அனைவரும் ஆங்காங்கு தக்க கிளர்ச்சி செய்து, மகாநாடு குறித்து நம்மவரிடை ஆர்வம் பரப்பி, டிக்கெட்விற்பனைக்குப் போதிய உதவி செய்து உபகரிக்க வேண்டுகிறோம்.

ஆ. ஆ. முத்து நாடார்,
ஜெனரல் ஸெக்ரெட்டரி.

### அறைகூவல்.

நாடார் 12-வது மகாநாட்டை அருப்புக்கோட்டையில் வெகு விமரிஸையாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை உபசரணைக் கமிட்டியார் துரிதமாய்ச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதைக் கேட்க நாடார் பெருமக்கள் வரம்பிலா இன் புறுவர் என்பதில் ஐயமில்லை. மகாநாட்டைத் திறந்து வைக்க நம் மாகாண அரசாங்க முதன் மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் மனமுவந்து ஒப்புக்கொண்டது ஓர் குறிப்பிடத்தக்க விஷயமாகும். ஆகவே மகாநாடு தனி சிறப்புடன் இனிது நடைபெறு மென்பதற்குச் சந்தேகமில்லை. நம் மாகாண தற்கால அரசியல் நிலையை உற்று நோக்கின் கனம். டாக்டர். சுப்பராயன் அவர்களின் உறவால் நம் மக்கள் பெரிதும் நன்மைபெற மார்க்கம் உண்டு எனத் தைரியமாய்க் கூறலாம். எனவே அருப்புக்கோட்டை மகாநாடு ஓர் பிரதம மகாநாடாகவே ஏற்படுகிறது. ஆகலான் பல பாகங்களிலும் வதிந்து வரும் நாடார் மகாஜனங்கள் யாவரும் வருகிற ஜூலை மாதத்தில் நடக்கவிருக்கும் நம் அருமை அருப்புக்கோட்டை மகாநாட்டுக்குத் திரள் திரளாக விஜயம்செய்து மகாநாட்டைக் கண்ணியப் படுத்தக் கடமைப்பட்டுள்ளார் என்பதை ஞாபக மூட்டுகிறோம்.

எம் குல சகோதரர்களே! அருப்புக்கோட்டைக்கு வாருங்கள்; வந்து நான் பரன்மை சிறப்புவியுங்கள். நமக்கான நிர்மாணத் திட்டங்களைக் கோலி சமூக அரசியல் விடுதலைக்கான திட்டமான வழிகளைக் காண அருப்புக்கோட்டை மகாநாடு தகுந்த முறைகளைப் போ

# நாடார் மஹாஜன சங்கம்

## 12-வது மகாநாடு,

### அருப்புக்கோட்டை.

விபவ-ஹு ஆனி மீ 21, 22, 23
(1928-ஹு ஜூலை மீ 4, 5, 6) தேதிகளில் நடைபெறும்.
குமாரமங்கலம் ஜமீன்தாரும்,
சென்னை கவர்ன்மெண்ட் முதல் மந்திரியுமான
கனம். டாக்டர் பி. சுப்பராயன் எம். ஏ., பி. ஸி. எல்.,
எல். எல். டி. அவர்கள் மகாநாட்டைத்
திறந்து வைப்பார்கள்.
பொறையார், ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்கள்
அக்கிராசனம் வகிப்பார்கள்.

ஆ. ஆ. முத்து நாடார், ஜெனரல் ஸெக்ரெட்டரி. } ப. உ. ஆ. சிதம்பர நாடார், உபசரணைக் கமிட்டிச் சேர்மன்.

## செய்தித் திரட்டு.

ஆப்பிரிக்கா கேப்டவுனிலிருந்து லண்டனுக்குள்ள 10,000 மைல்சன் தூரத்தை லேடி ஹீத் எனும் ஆங்கில மாது ஆகாயக் கப்பல் மார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்திருக்கிறார்.

* *

வங்காளத்தில் இன்னும் பஞ்சம் தீர்ந்தபாடில்லை. கஷ்ட நிவாரணத்தின் பொருட்டு வங்காளக் கவர்னர் பஞ்சப் பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து ஏற்ற பரிகாரம் தேடிக் கொண்டிருக்கிறார்.

* *

கராச்சி இம்பீரியல் பாங்கில் வேலையிலிருந்த ஒருவர் தன்னை முன்னெச்சரிக்கையின்றி வேலையிருந்து நீக்கிவிட்டபடியால், ஒரு மாதம் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும், தான் கூடிவரம் செய்யாமல் காரியாலயத்திற்கு வந்ததற்காக விதித்த அபராதம் ரூ 1-0-0 ஐத்திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் பாங்கு மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்.

* *

பர்மா எல்லைப் புறங்களிலுள்ள பட்டு வியாபாரிகளை சையாம் கொள்ளைக்கூட்டத்தினர் கொள்ளையாடி வருகின்றனர். பணங்களைப் பறிப்பதும் சுட்டுத் தள்ளுவதும், அடிப்பதுமாக விருந்து வருகிறார்கள். இக்கூட்டத்தில் மாஜி சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சேர்ந்திருக்கிறார்கள். இக்கூட்டத்தினரின் கொடுமையை ஒடுக்க சர்க்காருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

* *

சந்திர புரி மகாராஜாவின் 5-வயது புத்திரிக்கும், பாட்டியாலா மகாராஜாவின் 7-வது புத்திரனுக்கும் விவாகம் செய்வதற்கு நிச்சயமாகி அதற்குரிய சடங்குகள் நிறைவேறி விட்டன. இன்னும் 6 வருடத்திற்குப் பின் கல்யாணம் நடைபெறும்.

* *

வங்காள நிர்வாக சபையின் அங்கத்தினரான நாடியா மகாராஜா சில காலமாய் நோய் வாய்ப்பட்டிருந்து தமது பங்களாவில் மரணமாகி விட்டார்.

* *

காஷ்மீரம் மகாராஜா பால்ய விவாகத்தைத் தடுத்து ஒரு சட்டம் செய்து அதை மீறுவாரைத் தண்டிக்க உத்தரவு

---

திக்கும் என்பது திண்ணம். வாலிபர்களே! மாணவர்களே! உங்கள் ஊரிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் செல்வதற்கான கிளர்ச்சிகளை இன்று முதல் உங்கள் ஊரில் செய்யுங்கள். அருப்புக்கோட்டையில் நம் சங்க நாதத்தை ஊதுவோம் வாருங்கள். திரள் திரளாக வாருங்கள்.

நாடார் பரிபாலன சங்கத்தார்,
விருதுநகர்.

---

செய்திருக்கிறார். இவர் சமீபத்தில் ஐரோப்பாவுக்குச் செல்லுவார்.

* *

காஞ்சிபுரத்தில் பால்ய விவாகத்தை யெதிர்த்து தேவ ராஜ ஸ்வாமி கோவிலில் ஓர் கூட்டம் கூடி, சவர்ன்மெண்டார் மற்ற விஷயங்களில் தலையிடக் கூடாதென்றும், பால்ய விவாக மசோதாவை ஆதரிப்பவர்கள் சகல இந்திய ஜனங்களுக்கும் பிரதிநிதிகளல்ல வென்றும் தீர்மானமாகியது.

* *

ராமநாதபுரம் பால சுப்பிரமணிய சுவாமியார் என்பவர் துறவி போல் வேடங்கொண்டு கேசவலு செட்டியாரின் மனைவியிடம் ஏமாற்றி 20 ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகளை அபகரித்து விட்டதாக அவரைத் திருச்சினாப்பள்ளிப் போலீஸார் கைது செய்திருக்கின்றனர். இது வரையில் ரூ 4500-0-0 நகைகள் கைப்பற்றப் பட்டிருக்கின்றன.

* *

பண்டிதநேரு பார்லிமெண்ட் தூதுவக் கூட்டத்தினரில் ஒருவராகக் கானடா செல்வாரென்று தெரிகிறது.

* *

ஆலப்புழையில் இரு பையன்கள் சங்கீதம் பயின்று வந்தார்கள். அவர்களுடைய கானம் இனிமையாயிருப்பதற்காகத் தொண்டையைச் சீர் பண்ணவென அவர்களுடைய நண்பனொருவன் ஏதோ ஒருவிதப் பழத்தைச் சாப்பிடும்படி கொடுத்தான். பையன்களிருவரும் தொண்டை மாற வேண்டுமெனும் ஆவலால் அப்பழத்தைச் சாப்பிட்டார்கள். உடனே இருவரும் வாந்தி யெடுத்து உயிர் துறந்தனர்.

* *

தஞ்சூர் ஜில்லா பலுர்சட் எனுமிடத்தில்பஞ்சக் கொடுமையால் பிள்ளைகளை விற்று வருவதுடன், கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் விவாக விடுதலை செய்து வருகிறார்கள்.

* *

காஷ்மீர சமஸ்தான அபிவிர்த்தி மந்திரி சுரங்கத் தொழிலில் பயிற்சி பெற ஐரோப்பா செல்கிறார். அவர் ஐரோப்பா முதலிய இடங்களில் விற்பதற்காக 20 லக்ஷம் ரூபாய் பெறுமான முன்ன வைரம், நீலம் முதலிய கற்களையும் கொண்டு செல்கின்றார்.

* *

திரு. எஸ். ஸ்ரீநிவாசஐயங்கார் லண்டன் சென்றிருக்கிறார். இங்கிலாந்து ஸ்காத்லந்து, வேல்ஸ் முதலிய நாடுகளிலும், ஐரோப்பாவில் ஏனைய நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, செப்டம்பர்மீ இந்திய சட்டசபைக்கு ஆஜராகத் தக்கதாய் இந்தியாவிற்குத் திரும்புவார். இவரின் ஐரோப்பியச் சுற்றுப் பிரயாணம் தேக சௌக்கியத்தை முன்னிட்டே.

* *

இங்கிலாந்தில் ஆகாய விமானப் பயிற்சி பெறுவதற்காக, ஸ்ரீமான் கனான, சென்னை இஞ்ஜினீரிங் கலாசாலை பழைய மாணவர், ஜி. எஸ். சுப்பிரமணியம், நைஜாம் நீர்ப்பாசன அணைக்கட்டுத் திட்ட உதவி இஞ்ஜினீர் அசமுதின், வங்காளம் போஸ்ட்டாபீஸ்கள் டிப்டி டைரக்டர் ஜெனரல் என். கே. ராகாவின் குமாரர் ராகா ஆகிய மூவரும் இந்திய அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர். லண்டனிலுள்ள ஹை கமிஷனரால்மீண்டும்ஒரு ஸெலெக்ஷன் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இலவசமாகப் போக்குவரத்து செலவும் வருடம் 1-க்கு 240 பவுன்கள் உபகாரச் சம்பளமும் கொடுக்கப்படும். 2 வருடகாலம் பயிற்சி நடைபெறும். இம்மூவரும் கூடிய சீக்கிரம் இங்கிலாந்துக்குச் செல்வார்கள்.

* *

இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஸ்ரீ ராஷ்பிஹாரி போஸ் தற்போது ஜப்பானில் சர்வ கலாசாலையில் ஆசிரியராயிருக்கிறார். இவவேனிற் காலத்தில் ஜப்பான் மன்னர் மாளிகையில் விருந்து நடந்தபோது ஜப்பான் அரசர் அவரை யழைத்து தம்முடன் சமபந்தி போஜன மளித்திருக்கிறார். ஜப்பான் அரசருடன் இந்தியர் சமபந்தி போஜனம் செய்தது இதுதான் முதற்றடவையாகும்.

* *

தலகான் என்ற விடத்தில் ஒரு இந்திய மாணவர், சமீபத்தில் நடந்த பி. எஸ். ஸி. பரீக்ஷையில் முதற்றரமாகத் தேர்ச்சவறியதால் விஷமுண்டு தற்கொலை செய்து கொண்டார். இம்மாணவரின் ரோஷந்தான் என்னே!

* *

மதுரை முஜாபரி பங்களாவிற்கு அடுத்துள்ள ஓட்டபட்டி கிராமத்தில் வசித்துவரும் ரெங்கசாமி ஒட்டனின் மனைவி லெக்ஷ்மி தனது 6, 3, 1-வயதுக் குழந்தைகள் மூன்றையும் தன் வீட்டிற் கருகிலுள்ள கிணற்றில் தள்ளிவிட்டுத் தானும் விழுந்து உயிர் நீத்தாள். இச்சம்பவத்திற்குக் காரணம்தெரியவில்லை.

* *

திருச்சினாப்பள்ளி ஜில்லாபோர்டு தலைவராக ஸ்ரீமான் டி. எம். நாராயணசாமிபிள்ளையவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். இஜ்ஜில்லாபோர்டு பிராமணரல்லதார் ஆக்ஷிக்குள் வந்தது இதுதான் முதற்றடவை.

* *

தென் திருவிதாங்கூரிலுள்ள தெங்கம்புதூரில் பணக்கார நாடாரொருவரையும் அவரது முதன் மனைவியையும் யாரோ வீடு புகுந்து இராத்திரியில் கத்திகொண்டு குத்திக்கொன்றுவிட்டார். அவர் இருமனைவியரை மணந்திருந்தார். அம்மனைவியர்களிடை மனஸ்தாபம் பல மாயிருந்தது. கொலை செய்தவர் இன்னாரெனத் தெரியவில்லை. போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

* *

மதுரையில் ஒரு சர்வ கலாசாலையை ஏற்படுத்துவதற்கு ஸர். டி. முத்தையா செட்டியார் 35 லக்ஷம் ரூபாய் நன்கொடையளிப்பதாய்ச் செய்யப்பட்டிருக்கும் விளம்பரம் பொய்யெனப் பல பத்திரிகைகள் எழுதுகின்றன. இது கண்டு ஜனங்கள் திரு. செட்டியாரின் உண்மை வாய்மொழியை எதிர் நோக்கியிருக்கின்றனர்.

---

க்ஷத்திரிய வித்தியாசாலை,
காட்டு நாயக்கன்பட்டி.

### இரண்டாவது ஆண்டு நிறைவு விழா அழைப்பு.

எல்லாம்வல்ல இறைவனின் திருவருட்டுணையால் நிகழும் விபவஹு வைகாசிமீ 21௳ (3-6-28) ஞாயிற்றுக் கிழமையன்று மேற்படி வித்தியாசாலையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இலங்கைச் சட்ட சபை மெம்பர் ஸ்ரீமான் ஜ. எச்ஸ். பெரைரா அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் தங்கள் நண்பர் குழாங்களுடன் விஜயஞ்செய்து விழாவைச் சிறப்பிக்கக் கோருகிறேன்.

சு. பொன்னுநாடார்,
தூரவேலாயூர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## குடும்பப் பெருமை.

சென்றசித்திரை மீ 13உ பிரசுரமாகி வந்தமித்திரனில் ஸ்ரீமான் சிவ. சு. சிவசுப்பிரமணியன் "குடும்பப்பெருமை" என்று தலைப்பிட்டு குடும்பத்தில் ஒற்றுமை அவசியம் வேண்டுமென்று வரைந்துள்ளதை யான் வாசித்து ஆனந்தம் கொண்டேன். மற்ற நண்பர்களும் ஆனந்தம் அடைந்திருக்கலாம். அன்னார் இன்னும் பல கட்டுரைகள் அன்புடன் எழுதிவருவார்கள் என்று நம்புகிறேன்.

அவர் விடுத்த குடும்பப் பெருமை பற்றிய கட்டுரை சம்பந்தமாக ஓர் விஷயம் சொல்லத் துணிகிறேன். அவர்கள் ஒரு சார்பாரின் நடக்கைகளைப் பற்றித் தெளிவாக எடுத்து காட்டி மற்ற சார்பாரின் விஷயங்களைச் சுருக்கமாய்ச் சொல்லி முடித்தனர். அப்படியிருப்பதால் இவ்விஷயத்தை இதோடு நிறுத்துவது சரியல்ல. இதை விரித்து எழுதுவதால் நம் பாரத மக்கள் கொஞ்சம் பயனை யடையக் கூடும் என்ற அபிப்பிராயம் கொண்டு கொஞ்சம் கூட்டி எழுதலானேன்.

குடும்பம் என்பது தாய், தந்தையர், பாட்டன், பாட்டி, சகோதர சகோதரிகள், புத்திரன், புத்திரி, மாமன், மாமி முதலிய பல பேர்வழிகள் சேர்ந்தது. ஆகவே இவ்வெல்லோரிடத்திலும் மெய்யன்பு நிறைந்திருந்தாலொழிய குடும்பம் சந்தோஷமாய் வாழ்தல் சாத்தியப்படாது. இத்தகைய அன்பையே "பந்த பாசம்" என்று விளம்பாநிற்பர். உள்ளன்பு எவ்வளவுக் கெவ்வளவு நிறைந்திருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஒற்றுமை ஏற்படும். ஒற்றுமையால் குடும்பத்திற்கு கௌரவமும், திருப்தியும், பலமும் உண்டாகிறதென் பலத அறியவேண்டும். அவ்வறிவு கொள்ளற்குக் கல்வியே சாதனம். கல்வியுடையோர்களே ஒற்றுமை இன்னதென்பதை நன்றாய் அறியக்கூடும். இதை உத்தேசித்து ஒவ்வொரு குடும்பத்தாரும் கல்வியை விருத்தி செய்து கொண்டேவர வேண்டும்.

குடும்பத்தில் அதிருப்தியும், ஒற்றுமைக் குறைவும் ஏற்படுவதற்கு காரணங்கள் பல விருப்பினும், அவற்றுள் சிலவற்றையாகிலும் சொல்ல வேண்டுவது அவசியமாகும். கல்வி, உடுப்பு, வேலை, நகைகள் போடுதல், ஸ்திரீதனப் பொருள்கள் கொடுத்தல், சொத்து முதலியவை பங்கிடுதல் முதலியவைகளில், சமமாக நடத்தாதிருத்தலே பெருங் காரணங்கள். அதோடு கற்பில்லாதிருத்தல், வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்தல் முதலியவையும் குடும்பத்தின் ஒற்றுமையைக் குறைக்கலாம். சாதாரணமாக ஒருவர் தம் இரு புதல்வர்களில் தான் என்ன செய்கிறார் என்பதை நன்கு உணராது ஒரு மகனுக்கு எலிமெண்டரி கல்வியோடு நிறுத்தி, வீட்டில் வேலை செய் என்று கட்டளையிட்டு மற்றவனை மிகவும் உயர்ந்த கல்வியையடையும்படி செய்தல், சகோதரருக்குள் அதிருப்தி ஏற்படுத்துவது திண்ணம். இன்னும் சிலர் ஒரு மகனுக்கு நல்ல நிலங்களையும் மற்றவனுக்கு மோசமான நிலங்களையும் பங்கிட்டுக் கொடுத்து ஒருவருக்கொருவர் பொருமையாகும்படி செய்து கொள்கிறார்கள். ஒரு புதல்விக்கு அதிகமான ஆபரணங்களையும், ஸ்திரீதனப் பொருள்களையும் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்குக் கொஞ்சம் வழங்கினால் கொஞ்சம் அடைந்தவர்கள் மற்றவர்களோடு வெறுப்பு அடைகிறார்கள். பெண்ணின் பந்துக்கள் பிள்ளையின் பந்துக்கள் விருந்துக்கு வந்த காலத்தில் சமமான அன்போடு உபசாரம் பண்ணுதிருத்தலும் அனேக குடும்பங்களில் சண்டைக்குக் காரணமாகி விடுகிறது. இவ்வாறு அனேகர் அநீதியாய் நடந்து குடும்பத்தில் சண்டை சச்சரவுகளை இழுத்து நாசமடைகின்றனர். இவர்களின் செய்கை தான் என்னே!

இன்னொரு முக்கியமான விஷயம் குடும்பத்தில் கவனிக்கப்பாலதுளது. மாமி மருமகள் இருவரும் ஒற்றுமையாயிருக்க வேண்டும். வண்டிக்கு எப்படி அச்சாணி முக்கியமோ அப்படி இவர்கள் இருவரும் குடும்பத்திற்கு முக்கியமானவர்கள். ஆனால் அனேகர் விபரீதமாய் ஒருவருக்கொருவர் நினைத்துக்கொண்டு வீணேகலகத்தை விளைவிக்கின்றனர். மருமகள் தன் கணவனுடைய சொத்துக்களைச் சுயேச்சையாய் அனுபவிக்க [illegible] அதற்கிடையூறாய்த் தோன்றும் மாமன் மாமியருக்கு விரோதமாகக் கணவன் தன் பெற்றோர்களைப் படாத பாடு படுத்திவைக்கும்படி செய்து விடுகிறார்கள். இவர்களை பிடாரியென்று அழைப்பினும் தகும். மாமியார் சிறுவயதாக இருக்கும்பொழுது தன்னுடைய மாமியாரிடம் எவ்வளவு மரியாதையாய் நடந்து கொண்டாளோ அவ்வளவு மரியாதை மருமகளிடத்திலும் எதிர் பார்ப்பின் அதை அந்யாயம் என்று சொல்லுவதற்கு இடமில்லை. சிலபேர் வழிகள் தம்முடைய மாமியாரிடம் பட்ட கஷ்ட நிஷ்டூரங்களை எண்ணி மருமகளிடத்தில் அநுதாபமும் காட்டக் கூடும். மேலும் மூத்தவளாக இருக்கும் மாமியார், உலகநடை தெரிந்தவளாகவும் அனுபோகமிருந்தவளாகவும் இருப்பதால் மருமகள் அவள் சொல்வது நன்மையாகவே இருக்கும் என்று நினைக்கவேண்டும். ஒருக்கால் மாமி கெட்டவளாகவே இருப்பினும் மருமகள் கொஞ்ச காலத்துக்குத் தான் கஷ்டப்பட வேண்டியதிருக்கும். இவ் விஷயங்களை உண்மையாகவே அறிந்து மருமகள் நடக்க வேண்டுவது அவசியம்தான். பிள்ளைக்குத் தகுந்த பெண்ணையும், பெண்ணுக்குத் தகுந்த பிள்ளையையும் தேடி வைப்பதும் குடும்ப ஒற்றுமைக்கு ஓர் சாதனம் என்று அறிவார்களாக.

பல விதமான கஷ்டங்களுக்கு உள்ளாகி புத்திரர் புத்திரிகளை வளர்த்த நன்றியை மறக்காது பெற்றோர்களுடைய மனம் சாந்தமடையுமாறு நடந்து கொள்வது புத்திரர் கடமைகளில் ஒன்று. குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நபரும் அவர் அவர்களின் கடமைகளைச் செய்து பக்ஷபாதமின்றி உள்ளன்போடும் கஷ்ட நஷ்டங்கள் வரினும் திருப்தியோடும் ஒற்றுமையோடும் வாழ்தலே சாலச் சிறந்ததாகும்.

கா. சு. தங்கவேல் நாடார்,
ரங்கூன்.

## க்ஷத்திரியஹாஸ்டல்.

பாளையங்கோட்டை அர்ச. சவரியார் கல்லூரியில் நாடார்குல மாணவர்கள் அபிவிருத்தியின் பொருட்டு மேலே சொல்லிய க்ஷத்திரியஹாஸ்டல் திறக்கப்பட்டு சென்ற 5 வருஷங்களாய் வெகு பிரசித்தியுடன் நடைபெற்று வருகிறது. தற்போது இந்த ஹாஸ்டலில் 30 மாணவர்களிருக்கின்றனர். போஜன விஷயத்தில் மாணவர் ஒவ்வொருவருக்கும் சராசரிமாகம் ஒன்றுக்குச் செலவு ரூபாய் 11½. தங்கியிருக்கும் அறைக்கு வாடகை ரூபாய் 1¼. இந்த ஹாஸ்டல், காலேஜிற்கு அடுத்த வடபுறம் உள்ள ஓர் பெரிய மாளிகையில் அமைக்கப் பட்டுள்ளது.

தென்னாட்டுப் பட்டணங்களில் பாளையங்கோட்டை மிக்க சுகாதாரம் பொருந்தியது என்று பாராட்டப் படுகின்றது. அவ்வூரில் சுகாதாரத்திற்கு முதல் தரமான இடமாக விளங்குவதாகிய க்ஷத்திரிய ஹாஸ்டலிருக்கும் இந்தப் பகுதி சுத்தத்திற்கும், காற்று ஓட்டத்திற்கும், விரிவான மைதானத்திற்கும், பேர்போனது. கனம் எஸ். மரான்டா சுவாமியவர்கள், பி. ஏ., தலைமையிலும், ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். டேவிட் மிக்கேல் அவர்கள் மேல் விசாரணையிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சென்னைக்குத் தெற்கில் சான்றோர் (நாடார்) குல மாணவர்களுக்கு இதுபோலும் முதல் வகுப்புக் கல்லூரியும், அக்கல்லூரியில் சுருக்கமான செலவும், பெருக்கமான வசதிகளுமுள்ள இதுபோலும் முதன்மையான ஹாஸ்டலுங்கிடைப்பது அருமை என்பது திண்ணம். இதில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள் சர்வானுகூலமும் பெற்று பரீக்ஷையில் சித்தியடைந்து வருகின்றார்கள்.

ஆதலின், முற்கூறிய நலன்களை விரும்புவோரனைவரும் இதில் உரிய காலத்தே சேர்ந்து கல்விப் பயிற்சி செய்ய வேண்டுகின்றோம். மேலும் விபரம் அறியவிரும்புவோர் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளவும்.

எஸ். டேவிட் மிக்கேல், பி. ஏ., எல். டி.,
சப்வார்டன், க்ஷத்திரிய ஹாஸ்டல்,
பாளையங்கோட்டை.

## இந்துஎலிமெண்ட்டரிஸ்கூல் ஆறுமுகநேரி.

### 5-வது வருஷக் கொண்டாட்டம்.

ஆறுமுகநேரி, ஹிந்து உயர்தர ஆரம்பப்பாடசாலையின் 5-வது வருஷாந்தர வைபவமானது நானது மேமீ 17-ம் உ வியாழக்கிழமை மாலை நாலரை மணிக்கு நடைபெற்றது. அவ்வமயம் திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரஸிடெண்டு மகா-ள-ள-ஸ்ரீ எஸ். குமாரஸ்வாமி ரெட்டியார் அவர்கள் பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி. அக்கிராஸனம் வகித்தார்கள்.

சுமார் 2000-க்கு மேற்பட்ட ஜனங்கள் உள்ளூரிலும் வெளியிடங்களிலுமிருந்து வந்திருந்தார்கள். அவர்களுள், ஸ்ரீமான்களான ஏ. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி., ஆவுடையப்பபிள்ளை பி. ஏ. பி. எல். வக்கீல், திருநெல்வேலி கிருஷ்ணசாமி ஐயர் பி. ஏ. எல். டி. பள்ளிக்கூடம் டெப்யுட்டி இன்ஸ்பெக்டர், திருச்செந்தூர், ஸ்ரீநிவாஸயங்கார், பிரதம ஜிம்னாஸ்டிக் இன்ஸ்பெக்டர், உபாத்திமார் கல்லூரிசைதாப்பேட்டை ஆர். லக்ஷ்மணபிள்ளை பி. ஏ. (ஆனர்ஸ்) உபந்நியாசர், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி, ராமசாமிநாடார், ஜில்லாபோர்டு மெம்பர், மிஸ்டர் அண்ட் மிஸிஸ், டி. ஆர். எச். கிரெஸ்வெல், மிஸ்டர் அண்ட் மிஸிஸ் ரொஸாரியோ, இராமலிங்க ஆதித்தநாடார், காயாமொழி முதலானோர் முக்கியமானவர்கள்.

அக்கிராசனாதிபதி அவர்களை எதிர் கொண்டு சென்று மாலை சூட்டி நகர் வலமாக வாத்திய கோஷ்டத்துடனும் அதிர்வெடி முழக்கத்துடனும் பள்ளிக்கூடத்து விளையாட்டுக் கூடத்திற்கு அழைத்து வந்தார்கள்.

விளையாட்டுக்கூடம் பந்தல்கள் போடப்பட்டு தோரணங்கள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. கனம். அக்கிராசனாதிபதியவர்கள் முன்னிலையில் விளையாட்டுகள் நடைபெற்றன. அவற்றுள் மாணவர்கள், கழைகம்புகளுடன் செய்த கபாத்தும், பந்தங்களுடன் செய்த கபாத்தும், சுதேச கபாத்தும் மாறு வேஷந்தரித்துவரும் போட்டியும் மிகவும் மெச்சப்பட்டன.

12, 13-வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பெற்றிருந்த தேர்ச்சி அதிசயிக்கத் தகுந்ததே. விளையாடல்கள் பலவும் முடிவு பெற்றதும், விளையாட்டுக் கூடத்திற்கு எதிரிலுள்ள பள்ளிக்கூடத்தின் கண் அமைத்திருந்த அதியுன்னத மேடைக்கு அக்கிராசனாதிபதியை அழைத்துச் சென்றனர்.

அங்கு முதலாவதாக மாணவிகள் நடத்திய பின்னல் கோலாட்டமும், பாடிய பாடல்களும் பிருந்தாவனக் காக்ஷியோ வென ஜயுறச்செய்தன. சிறுவர் மூவரால் கடவுள் வணக்கம் பாடப்படவே, பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் கே. எஸ். சுப்பையர் பி. ஏ. எல். டி. அவர்களால் அக்கிராசனருக்கு நல்வரவுப் பத்திரமும், மானேஜரால் பள்ளிக்கூடத்தின் வருஷாந்திர ரிப்போர்ட்டும், மாணவர் கல்விச் சங்கத்தின் காரியதரிசியால் சங்கத்தின் ரிப்போர்ட்டும் வாசிக்கப்பட்டன. கல்வியிலும் பல விளையாடல்களிலும் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு அக்கிராசனரால் பல விலையுயர்ந்த பரிசுகளளிக்கப்பட்டன. பின்னர், சென்னை சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீமான் ஏ. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி. அவர்கள் "விளையாட்டும் அதன் மூலமாகக் கல்வி போதனையும்" என்ற விஷயத்தைப்பற்றி இனியதோர் சொற்பொழிவு புரிந்தார்கள். அதனிடையே அவர் பெரிய காலேஜ்களிலும் காணக்கிடையாத தேர்ச்சி, இப்பள்ளிக்கூடத்து மாணவர் பால் கண்டதாகக் குறிப்பிட்டார்கள்.

கடைசியாக அக்கிராசனாதிபதியவர்கள் தமது முடிவுரையில், மானேஜருக்கும், தலைமை ஆசிரியருக்கும், மாணவர்களை அத்தனை தேர்ச்சியுள்ளவர்களாகச் செய்திருப்பதற்காக வாழ்த்துதல்கூறி ஆரம்பக் கல்வி பரவவேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்திக்கூறி முடித்தார். அக்கிராசனருக்கும் மற்றும் வந்திருந்தோருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம்கலைவுற்றது.

இரவில் பள்ளிக்கூடத்தின் மாணவர்கள் ஆங்கிலத்தில் "மாக் பெத்" என்ற நாடகத்தின் சில பாகங்களையும், தமிழில் ராவ்பஹதூர்-சம்பந்த முதலியார் இயற்றிய "மெய்க்காதல் அல்லது சுந்தரி" என்ற நாடகத்தையும் நடித்தார்கள். தமிழ் நாடகத்தில் வீரம், சோகம், ஹாஸ்யமுதலியரஸங்கள் ததும்பியபாடல்களும், வசனங்களும், அபிநயங்களும் கொண்டு நடித்துக் காட்டியது பெரிதும் புகழப்பட்டது. அவர்களுக்குச் சொல்லிவைத்த ஸ்ரீமான் எஸ். ஏ. ராமச்சந்திர நாடார் அவர்களையும், அம்மாணவர்களையும், நாடகம் பார்த்தவர்கள் என்றும் நினைவு கொண்டிருப்பாரென்பது நிச்சயம் என்று ஸ்ரீமான் எஸ். ஏ. ஸ்ரீநிவாசநாடார் எழுதுகிறார்.

## பால்ய நாடார் சங்கம், கோப்பி நாயக்கன் பட்டி.

இச் சங்கத்தின் பொதுக்கூட்டம் வள்ளியப்பநாடார் க்ஷத்திரிய வித்தியாசாலை ஹாலில் நாட்டாண்மை ஸ்ரீமான் சு. ராமசாமிநாடார் அவர்கள் தலைமையின் கீழ் 20-5-28 ல் நடைபெற்றது. ஆரம்பத்தில் திரு. பழனிச்சாமி நாடாரால் கடவுள் வணக்கம் பாடப்பெற்றவுடன் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமான் கே. வி. குருமூர்த்தி அய்யர் அவர்களால் "சங்கத்தின் நன்மை" என்னும் விஷயம் பேசப்பட்டது. பின்னர் காரியதரிசி ஸ்ரீமான் ஜெ. ஏ. பொன்னையாநாடார் அவர்களின் ராஜிநாமா லெட்டர் வாசிக்கப்பட்டு அங்கீகாரம் செய்யப்பட்டது. மேற்படி யாருக்குப் பதில் மேற்படி வித்தியாசாலையின் உதவி உபாத்தியாயர் ஸ்ரீமான் எஸ். ரெத்தினசாமிநாடார் அவர்கள் ஏகமனதுடன் நியமிக்கப்பெற்று அன்னவரிடம் சங்க வரவு செலவு ரிக்கார்டுகள் ஒப்புவிக்கப் பெற்றன.

பின் மேற்படி வித்தியாசாலை மானேஜர் ஸ்ரீமான் நா. க. வ. மாரியப்ப நாடார் அவர்கள் "விருதுநகரிலிருந்து இவ்வூர் மார்க்கமாய் பேரையூர் வரையும் ரோடு போட்டுக் கொடுக்க வேண்டுமென்று எத்தனையோ மனுக்கள் எழுதியும் கவனியாமல் இருப்பது கிராமவாசிகளுக்கு நிரம்ப வருத்தத்தைக் கொடுக்கிறதாகையால், இனிமேலாவது மேற்படி ரோடு போடும் விஷயத்தை கனம். போர்டு மெம்பர்களும் அதிகாரிகளும் கவனித்து வேண்டியது செய்து கொடுக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிற" தென்னும் தீர்மானத்தைப் பிரரேபனை செய்ய அது ஏகமனதுடன் நிறைவேறியது. பின்னால் ஜில்லாபோர்டாருக்கும் கனம். மந்திரி அவர்களுக்கும் அத்தீர்மானத்தை அனுப்பும்படி காரியதரிசிக்கு அதிகாரம் கொடுக்கப்பெற்று கூட்டம் இனிது கலைந்தது.

எஸ். ரெத்தினசாமிநாடார்,
காரியதரிசி.

## புத்தியுள்ள புறா.

### காயமடைந்து ஆஸ்பத்திரிக்குச் சென்ற வியப்பு.

சென்னைஹைட்பார்க்மூலையில் கால் நசுங்கிக் காயமடைந்த "பிலிப்" என்னும் புறா தன் காயத்திற்குச் சிகிச்சை பெறுவதன் பொருட்டு செண்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரிக்குச் சென்ற வியக்கத்தக்க விஷயம் சமீபத்தில் வெளிப்பட்டது. அப்புறாவிற்கு எப்படி கால் நசுங்கியதென்பது தெரியவில்லை. ஹைட் பார்க்கில் வண்டிப்போக்கு வரவு மிகுதியாயிருந்தபோது அப்புறா நொண்டிக் கொண்டே தாவித்தாவி ரஸ்தாவைக்கடந்து செல்வதைச் சிலர் பார்த்தனர். அப் புறா ரஸ்தாவைக் குறுக்கிட்டுச் சென்று ஜனங்கள் நடந்து செல்லும் உயரமான பாதைமீது சிறிது தாமதித்து பிறகு பார்ப்போர் அனைவரும் வியப்படையும்படி செண்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரி படிகளைத் தத்தித் தத்தி ஏறி ஆஸ்பத்திரிக்குள் சென்றது. ஆங்கு டாக்டர் அப் புறாவின் விவேகத்தை வியந்து பாராட்டி அதன் காலுக்குமருந்து போட்டுக் கட்டுக்கட்டினார். பிறகு அதனைத் தாமே நேரில் சிகிச்சை செய்யக் கருதி தம் வீட்டுக்கு எடுத்துச் சென்று சில தினங்கள் சிகிச்சை செய்த பின் ஒருநாள் வெளியே கொண்டு வந்து அதன் கால் சொஸ்தமாகிவிட்டதாகக் கூறினார். அப் புறா உடனே அவருக்கு வந்தனமளிப்பது போலச் சத்தமிட்டு எங்கோ பறந்து போய்விட்டது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இயந்திர விபத்து

### மனிதனுக்குப் போட்டி.

அமெரிக்காவில் மூன்று ஆண்டு வசித்து விட்டுச் சமீபத்தில் இங்கிலாந்து திரும்பியிருக்கும் "தார்" என்னும் புனைப் பெயர் கொண்ட பிரபல பிரிட்டிஷ் ஆசிரியர் "டிட்பிட்ஸ்" பத்திரிகையில் வரைந்திருக்கும் ஒரு கட்டுரையின் சாரமாவது:—

சமீபத்தில் ஒருநாள் ஐம்பது ஸ்திரீகள் உள்ளிட்ட முந்நூறு பேர் நியூயார்க்கில் ஒரு தொழிற் சாலையை முற்றுகை யிட்டு வேலை வேண்டுமென்று கூச்சலிட்டார்கள். குபேரபுரியில் பிடிசோற்றுக்குத் தவித்தார்களென்றால் அஃது ஆச்சரியமன்றோ? உலகிலேயே பணம் பெருத்த நாடு என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை தோன்றத் தொடங்கி யிருக்கிறது.

அமெரிக்க ஐக்ய இராஜியத்தில் தற்போது 40 லட்சம் பேர் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். நியூயார்க்கில் அரசாங்க அறச்சாலைகளில் ஒரு துண்டு ரொட்டிக்காக மக்கள் வரிசை வரிசையாகக் காத்திருக்கும் காட்சியை இன்று காணலாம். என்ன விந்தை பாருங்கள்! 15 கோடி டாலர் சினிமா படங்களுக்கும், தங்கக் கூரை போட்ட ஆகாய மனாவும் மாளிகைகளுக்கும் பெயர்போன நியூயார்க்கில் அன்றாடம் வயிறு நிரப்ப வழியறியாத பிச்சைக்காரர்கள் இலவசமாகப் படுக்க இடந்தரும் தர்ம சத்திரங்களில் கூடும் கூட்டம் சொல்லமுடியாது. முன் காலத்தில் அடிமைகள் ஏலத்தில் விற்கப்பட்டது போல் வேலையில்லாத் திண்டாட்டத்துக் காளான தொழிலாளரின் உழைப்பு 'ஏலம்' போடவும்படுகிறது.

அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தில் வேலை யில்லாதவர்கள் 40 லட்சம் பேர்! இம்மாதிரி நிலைமை இதற்கு முன் அங்கு ஏற்பட்டதே கிடையாது. அங்கே வேலை யில்லாதவர்கள் இருந்ததுண்டு. ஆனால் அஃது ஒரு திண்டாட்டமானதில்லை. தொழிலாளர் ஓரிடத்திலிருந்து ஓரிடம் பெயர்ந்து கொண்டிருந்ததுண்டு; ஆனால் அதிகப்படியான தொழிலாளர் எப்போதுமிருந்ததில்லை.

உண்மை என்னவென்றால், முதன் முதலில் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்து பத்து வருஷங்களுக்கு முன் வரையில் மனிதர் குடியேறாத பிரதேசங்கள் அமெரிக்காவில் இருந்து வந்தன. ஜனத்தொகை அதிகமான போதெல்லாம் அதிகப்படியான மனிதர்கள் புதிய பிரதேசங்களுக்குச் சென்று குடியேறி வந்தார்கள். ஆனால் இப்போது அக்காலம் மலையேறிவிட்டது. அமெரிக்கா கண்டத்தில் புதிதாகச் சென்று குடியேறக் கூடிய பூமி ஓர் அங்குலமும் இப்போது கிடையாது.

இவ்வாறு ஒரு புறத்தில் பரவுவதற்கு இடம் சுருங்கிப்போயிருக்கையில், மற்றொரு புறத்தில் இயந்திரங்கள் அமெரிக்கத் தொழிலாளியை நெருக்கத் தொடங்கி யிருக்கின்றன. மனிதனுடைய வேலைகளை யெல்லாம் இயந்திரங்கள் சிறிது சிறிதாகக் கைப்பற்றி வருகின்றன. அவ்வாறு அமெரிக்கத் தொழிலாளி இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையை எய்தியிருக்கிறான்.

இங்கிலாந்திலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் அமெரிக்காவின் வேலை யில்லாத் திண்டாட்டத்துக்கும் வேற்றுமை யுண்டு. இங்கிலாந்தில் சாமான் உற்பத்திக்குத் தகுந்த விற்பனை யின்மையால் சரக்குத் தேங்குகிறது; இதனால் உற்பத்தியைக் குறைக்க வேண்டி வருகிறது; அதன் பயனாகத் தொழிலாளர் வேலையில்லாத் திண்டாட்ட மடைகின்றனர். அமெரிக்காவில் இப்படியன்று. அங்கே ஒரு புறத்தில் செல்வம் பெருகிக் கொண்டிருக்கையில், மற்றொரு புறத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் மிகுந்து வருகிறது. அதாவது பண்ணைகளிலும் தொழிற் சாலைகளிலும் பொருள் உற்பத்தி அதிகமாகி வருகையில், அவற்றில் வேலை செய்பவர்களின் தொகை மட்டும் குறைந்து வருகிறது. அமெரிக்கத் தொழிற்சாலைகள் 1919-ம் ஆண்டில் உற்பத்தி செய்த பொருள்களை விட 100-க்கு 23 வீதம் அதிகமாக 1927-ல் உற்பத்தி செய்திருக்கின்றன. ஆனால் அவற்றில் வேலை செய்த தொழிலாளர்களோ முந்தைய வருஷத்தை விடப் பிந்தைய வருஷத்தில் 100-க்கு 14-வீதம் குறைவு. இவ்வாறு மனிதனுடைய இடத்தை இயந்திரம் அபகரித்து வருகிறது. விவசாயத் துறையிலும் நிலைமை இதுவே. சென்ற நான்கு வருஷத்தில் விவசாயப் பொருள் உற்பத்தி 100-க்கு 100 வீதம் அதிகமா யிருக்கிறது. ஆனால் பண்ணைத் தொழிலாளரின் தொகையோ 100-க்கு 5 வீதம் குறைந்திருக்கிறது.

அமெரிக்காவில் சுரங்கங்களிலிருந்து வருஷந்தோறும் எடுக்கப்படும் நிலக்கரியில் முக்கால் பங்கு இயந்திரத்தினால் எடுக்கப்படுகிறது. இரும்புத் தொழிற்சாலைகளில் யுத்தத்திற்கு முன்னால் உற்பத்தியான இரும்பைப் போல் மூன்று பங்கு, அதே தொழிலாளரைக் கொண்டு இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. முன்னர், ஒரு மனிதன் கை இயந்திரத்தினால் 100 கண்ணாடிப் புட்டிகள் செய்யப் பிடித்த காலத்திற்குள் இப்போது பெரிய இயந்திரம் 4000 புட்டிகள் செய்து விடுகிறது. வயல்களில் புதிதாக உபயோகத்துக்கு வந்திருக்கும் 45,000 அறுவடை இயந்திரங்கள் 130,000 பண்ணையாட்களுக்கு வேலை யில்லாமல் செய்து விட்டன.

மேற்கூறிய புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதென்ன? அமெரிக்கத் தொழிலாளிக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு பெரிய அபாயத்தை அவை தெரிவிக்கின்றன. நாளுக்கு நாள் அவன் வேண்டப்படாதவனாகிறான் என்பதை அவை குறிப்பிடுகின்றன. தற்போது அமெரிக்க வாழ்வின் தெய்வமாய் விளங்கும் இயந்திர நாகரீகமானது, அமெரிக்கத் தொழிலாளிக்குப் பெரும் விபத்தாய் முடிந்திருக்கிறது. நாளடைவில் இயந்திர சக்தி அதிகமாக ஆக, தொழிலாளருக்குத் தேவை பெரிதும் குறைந்து விடும். குறைவான மனிதர்களைக் கொண்டு இயந்திரங்கள் அதிகமான பொருளை உற்பத்தி செய்யும். "பிரதி மனிதனுக்கும் அதிக உற்பத்தி" என்னும் கொள்கை இப்போது அமுலுக்கு வந்திருக்கிறது. இக்கொள்கையின் பொருள் நாளடைவில் குறைவான தொழிலாளிகள்" என்பதேயாகும்.

இரும்புத் தொழிற் சாலையிலும், மோட்டார்த் தொழிற் சாலையிலும் மட்டும் இயந்திரம் மனிதனுடன் போட்டிக்கு வரவில்லை. வாழ்வின் எல்லாத் துறைகளிலுமே அது மனிதனுக்குப் பெரும் போட்டியாய் முளைத்திருக்கிறது. மேற்கு அமெரிக்காவில் முன்னர் மாட்டு மந்தைகளை மேய்ப்பதற்கு ஏராளமான மனிதர்கள் தேவையாயிருந்தார்கள். இப்போது மோட்டார் வண்டிகளின் உதவியினால் இந்த வேலைக்கு ஒரு சிலரே போதியவராயிருக்கின்றனர். எனவே மாடு மேய்த்தவர் பலருக்கு இப்போது தொழிலில்லாமல் போய்விட்டது. வியாபாரிகள் தங்கள் பொருள்களை விளம்பரம் செய்து வருவதற்கு இப்போது மனிதர்களைத் தேடுவதில்லை. பத்திரிகைகள் விளம்பரத்துக்குச் சிறந்த சாதனம் என்பதை அவர்கள் கண்டுகொண்டார்கள். சினிமா படங்கள் எடுப்பதற்கு முன்னெல்லாம் ஏராளமான மனிதர்கள் தேவையிருந்தனர். இப்போது காகிதப் பொம்மைகளைக் கொண்டும், புகைப்பட யுக்திகளின் உதவியினாலுமே அப்படங்களைத் தயாரித்து விடுகின்றனர். இவ்வாறு அமெரிக்க வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இயந்திரம் மனிதனைத் துரத்தியிருப்பதைக் காணலாம்.

அமெரிக்காவின் இவ்வநுபவம் நமக்குக் கற்பிக்கும்பாடம் என்ன? இயந்திர நாகரீகம்தற்போது அடைந்திருக்கும் உச்ச நிலையில், தொழில்களுக்கு இயந்திரசக்தியை உபயோகப் படுத்துவது இனிமேல் மனிதனுக்கு அதிக வேலை தரமாட்டாது; அதற்கு மாறாக அவனை வேலை யில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாக்கும் என்பதே. இவ்வாறு, நமக்குக் கற்பிக்கப் பட்டிருக்கும் பழைய பொருளாதார தத்துவங்களெல்லாம் தலை கீழாகி விடுகின்றன. இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க ஒரு வழி விரைவில் தேடாவிடில், மனித வர்க்கத்தின் வருங்கால நிலை எவ்வாறிருக்குமென நாம் ஒருவாறு ஊகிக்கலாம். நாகரீகத்தின் உச்ச நிலையை யடைந்த சிறு சமூகங்கள் மிகவும் சக்திவாய்ந்த இயந்திர சாதனங்களுடையவை யாயிருக்கும். இயந்திரத் தொழிற்சாலைகளில் கணக்கில்லாத பொருள்கள் செய்து குவிக்கப்படும். அதிவிரைவான போக்கு வரவு சாதனங்களால் உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் அவை கொண்டு போகப்படும். ஆனால் இப்பொருள்களை வாங்கக்கூடிய ஜனங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருவார்கள். இயந்திரங்கள் மனிதர்களுடன் போட்டியிட்டு அவர்களுடைய தொழில்களை அபகரித்துக் கொண்டுவந்தால், அதன் பயனாக வேலையில்லாத் திண்டாட்டத்துக் காளாகி நலியும் மனிதர்கள் பிரஜா உற்பத்தியைக் கட்டுப் படுத்தும் முறைகளைக் கையாளவேண்டி வரும். பின்னர், இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் ஏராளமான பொருள்களை வாங்குவோர் யார்?

---

## இது இம்சையில்லையா?

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 2-வது வருட 1-வது பிரசுரம்.)

ஐயா, உயிர்ப் பிரயாணிகளின் கறியை என்னவோ தெய்வலோகச் சாப்பாடாகக் கருதி கிழமைக்குக் கிழமை தவறாது வாங்கிச் சாப்பிடுகிறீர்களே என்று கேட்டால், தின்னக் கொடுத்து வைத்தவர்கள் நன்றாய் வயிற்றை நிரப்ப வேண்டியதுதான்; நாவுக்கு ருசியாய்த் தின்பதில் பாவமென்ன, புண்ணியமென்ன? வயிற்றுக்குத் துரோகம் பண்ணாமல் ஆசைப்படுவதை வாங்கி அனுபவிக்க வேண்டியதுதான்; ஆட்டைக் கண்டோமா, அதை வெட்டக் கண்டோமா; காசைக்கொடுத்து வாங்குவதில் களவென்ன; பயமென்ன; இதில் இம்சை யென்ன என்று வாய் கூசாது கறி சாப்பிடுகிறவர்கள் பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் இங்கு சற்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஒரு திருட்டுச்சொத்தைப் பெறுமான விலை கொடுத்து யாரேனுமொருவர் அது திருட்டுச் சொத்து என்று தெரியாமல் வாங்கினாலுங் கூட, அது இன்னாருடைய சொத்து என்று தெரியவந்தால் விலை கொடுத்து வாங்கியவனை நாம் எவ்விதத் தண்டனைக்கும் உட்படுத்தலாம். நம்மிடமிருந்து அவன் திமிறவும் முடியாது. களவு சாமான் என்று தனக்குத் தெரியாவென்றால் அதையாரும் கேட்கமாட்டோம். ஒருவனுக்குச் சொந்தமான உயிர் ஆபத்து ஒன்றுமில்லாத சொத்தை மற்றொருவன் தெரியாமல் திருடிவந்து அதை விலை கொடுத்து வாங்கிய தோஷத்திற்கு ஒரு மனிதன் தண்டனை அடைய வேண்டுமானால் ஒரு உயிர்ப் பிராணியையே அதன் கால்களை மடக்கிக் கீழேதள்ளித் தொண்டையை நெரித்துத் திமிறவிடாது மடக்கி கோ! என்றும் ஐயோ! என்றும் அலற அலறக் கூர்மையான கத்தி கொண்டு கழுத்தை அறுத்துக் கடுகளவு கூட ஆட்டுக்குச் சம்மதமில்லாது நமக்குள்ள பலாத்கார குணத்தால் தாக்கும் கொலைத் தொழிலால் கிடைத்த கறியை அறிவுள்ள மனிதர்களாகிய நாம் ஆசையோடு வாங்குவதென்றால் இதை யார் இம்சையில்லை என்று ஒப்புவார்கள்? இதில் பாவமும் கொடுமையும் எவ்வளவோ மலிந்தன்றோ கிடக்கிறது? இதையும் நாம் தொடலாமா? வேண்டாம் வேண்டாம்.

---

## கிறிஸ்துவ கலியாண முறை.

### மண ஓலை கூறுதல் அவசியமா?

கல்கத்தா ஜூனியர், சாப்லின் ரெவெரெண்டு. வி. ஜி. பியர்ஸன் கிறிஸ்துவ கல்யாண முறைகளில் சில சீர் திருத்தங்கள் அவசியமாயிருப்பதைக் குறித்தும், கிறிஸ்துவ ஆலயங்களில் கலியாணத்தைக் குறித்து மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் விளம்பரப் படுத்துவது ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார். திரு. பியர்ஸன் இச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பதில், கலியாணத்தைக் குறித்துத் தொடர்ச்சியாக மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் மண ஓலை கூறுதல் என்னும் வழக்கம் தற்போது அர்த்த மற்றதாகத் தானிருக்கின்றது. இது அக்காலங்களில் கிறிஸ்தவர்களைக் கோவிலுக்குப் போகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமையன்று மண ஓலை விளம்பரத்தை ஆலயத்திற்கு வந்து வாசிக்காதவர்களுக்கு ஒரு ஷில்லிங் அபராதம் விதிக்கப்பட்டு வந்ததை யொட்டிய ஒரு பாகமாக விருப்பதாகத்தான் தோன்றுகின்றதேயன்றி வேறல்ல. இக்காலத்தில் இம்முறை பயன் பெறாது. தம்பதிகளாக இருவர் இணங்கிக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினால் அதனை ஏன் அவர்கள் பத்திரிகைகளில் சாதாரணமாக விளம்பரப் படுத்தி பின் கலியாணத்தை முடித்துக்கொள்ளக் கூடாது? இவ்வாறு பத்திரிகைகளில் விளம்பரப் படுத்துவதனால் மண ஓலை சம்பந்தமாக ஆலயத்தில் மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் சுமார் இருநூறு பேருக்கு முன் வாசிக்கப்படுவதை விட அதிகமாக விளம்பரப்படுத்தியதாகு மென்பதில் சந்தேகமில்லை. மேலும் கலியாணத்தைக் குறித்துப் பலருமறியச் செய்ய வேண்டுமென்பது தான் இதன் முக்கிய கருத்தாகையால் ஏராளமான சந்தாதார்களையுடைய முக்கிய பத்திரிகைகளில் வெளியிடுவது உசிதமாகும். பெரும் பான்மையோருக்குக் கலியாணத்தைக் குறித்த முறைகளும் வழக்கங்களும் ஒன்றும் தெரியாதிருக்கின்றது. எப்படி கலியாணம் செய்துகொள்வதென்பதே பலருக்குத் தெரியாதிருக்கிறது. கல்கத்தாவில் மாலை 7-மணி வரையிலும் கூட கலியாணம் நடத்தப் படுமென்பது எத்தனை பேருக்குத் தெரியும்? எவ்வாறு கலியாணம் செய்து கொள்வதென்பதைக் குறித்து ஒவ்வொரு பாடசாலையிலும் பாட முறைகளில் சேர்க்கப்பட வேண்டுமென்று கூறினர்.

---

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

வேற்றத்தாழ்வு வித்தியாசத்தால் தேசமக்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியமற்றுப்போக, தேசமானது பலம் கெட்டுஇன்னொருதேசஆதிக்குள்ளிருந்துவருகிறது. எந்த ஒரு அபிப்பாயமும் நீடித்த நாள் நிலை கொள்ளாது என்பது உண்மை ஆகக் காலசக்கரம் சுழல்கிறது. காந்தி தோன்றினர். அஞ்ஞானவிருள் போக்கினர். அவர்தரும் அறிவுப் பிரகாசத்தால் எங்கணும் உணர்ச்சி ததும்பி நிற்கிறது. இப்போது அனைவரும் வைதீகத்தைப் பார்த்து நகைக்கிறார்கள். வைதீகர்களோ திகைக்கிறார்கள். இனி வைதீகர்களின் மாய்மாலம் பலிக்காது. அவர்கள் நல்ல குணத்தோடு இணங்கிப் போனால் தான் பிழைப்பார்கள். இலதேல் அவர்கள் பாடு திண்டாட்டம் தான். எனவே, எல்லோரும் சமரஸ நிலை நின்று தேச விடுதலைப் போர் புரிவோமாக".

பிரசங்கமத்தியில் கேண் மின் கேண்மினென்ற சப்தங்கள் முழங்கின. ஜனங்களிடையில் புது உணர்ச்சி கிளம்பியிருப்பதாக வைதீகர் உணர்ந்தார். கூட்டம் கலைந்ததும் வைதீகர் அன்றிரா அவ்வூரிலேயே தங்கியிட்டு, மறுநாள் பிரயாணமானர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection